பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

தாமானதே சிறந்தது என்றால்



சொலிட்
பம்பையே வாங்குங்கள்

# உதயன்

விலை ரூ 2.50

When, only The best is Good Enough



Buy Solide Pumps

சுடர் 4 விபவ ஞூ பங்குனி மீ 07 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1409 ஷஃபா பிறை 11 (20 - 03 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:-89

# முல்லைத்தீவை நோக்கி துருப்புகள் நகர்வு

## எல்லாப் பகுதிகளிலும் தேடுதல் தீவிரம்

ஒட்டுசுட்டான், மார்ச். 20

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள நித்திக்காய்குளம், ஆண்டான் குளம், நாயாறு, குமுழமுனை ஆகிய பகுதிகளை நோக்கி, பெரும் எண்ணிக்கையான இந்தியத்துருப்புக்கள் நகர்ந்து செல்கின்றன.

பெருந்தெருக்கள் வழியாக கனரக வாகனங்களிலும், காட்டுப் பிரதேசங்கள் வழியாக நடைபவனியாகவும், கடந்த மூன்று நாட்களாக இந்தியத் துருப்புக்கள் சென்ற வண்ணம் உள்ளன.

நேற்று நண்பகலிலும் மாங்குளத்துக்குச் சமீபமாக பல வாகனுதிகள் வரிசையாகச் செல்வதைக் காண முடிந்தது.

இதேவேளை முல்லைத்தீவின் சகல பகுதிகளிலும் இந்திய அமைதிப்படையினர் தமது தேடுதல் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தி உள்ளனர்.

ஆண்டான் குளம், நித்திக்காய் குளம், குமுழமுனை, அலம்பில், நாயாறு ஆகியபகுதிகளில் தொடர்ந்தும் கடும் மோதல்கள் நடப்பதாகச் சொல்லப்படுகிறது.

அப்பகுதிகளில் தொடர்ந்து நாளாந்தம் பலத்த துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், ஷெல் சத்தங்களும் கேட்ட வண்ணமே உள்ளன.

நாயாறு, அலம்பில் பகுதிகளில் நடைபெற்று வரும் மோதல்கள் காரணமாக அந்தப்பகுதிகளுக்கான போக்குவரத்துச் சேவைகளும் துண்டிக்கப்பட்டுள்ளன.

இப்பகுதி மக்களில் பலரும் கால்நடையாக முல்லைத்தீவு நகரை நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர்.

முல்லைத்தீவு நகரம் வழமையான மக்கள் நடமாட்டத்துடன் இயங்குகிறது. போக்குவரத்துச் சேவைகளும் நடைபெற்று வருகின்றன.

(அ-113-10)

## சுபநேரம்

20-03-1989
பங்குனி 07
திங்கட்கிழமை

சுபநேரம்:
12 - 18 முதல் 01 - 48 வரை
ராகுகாலம்:
07 - 48 முதல் 09 - 18 வரை

## டிக்ஸிற் பாகிஸ்தானுக்கு

கொழும்பு, மார்ச் 20

கொழும்பில் உள்ள இந்தியத்தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் வருகிற மாதம் 2ஆம் திகதி பாகிஸ்தானில் இந்தியத் தூதராசப் பதவி ஏற்கிறார்.

யூகோஸ்லாவியாவில் உள்ள இந்தியத் தூதர் பி. எம். மல்ஹோத்ராவே இலங்கையில் இந்தியத் தூதராக நியமிக்சப்படவிருக்கிறார். (இ-எ)

## மார்ட்டின் வீதியில் இளைஞர் கொலை

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ். மார்ட்டின் வீதியில் நேற்று இரவு சுமார் 7.30 மணியளவில் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார்.

மரணமானவர் அடையாளம் காணப்படவில்லை.

(ஓ-9)

## பேர்னுட் சொய்சா எம் பி. ஆகிறார்

ஐக்கிய சோஷலிச அணியின் தேசியப் பட்டியல் மூலம் திரு. பேர்னுட் சொய்சா எம். பி. யாக நியமிக்கப்படுவார்.

நான்கு கட்சிகளின் கமிட்டி திரு. சொய்சாவுக்கே அதற்கான தகுதி இருப்பதாகத் தீர்மானித்துள்ளது.

தேசியப்பட்டியல் மூலம் நியமிக்சப்பட்ட டாக்டர் கொல்வின் ஆர். டீ. சில்வா எம்.பி. பதவியை ஏற்கும் முன்னர் காலமானார் என்பது தெரிந்ததே.

அந்த இடத்திற்கே திரு. பேர்னுட்சொய்சாவின் பெயர் சிபார்சு செய்யப்பட்டிருக்கிறது. (இ-எ)

## தெற்கில் 48மணி நேரத்தில் 6 பேர் கொலை

தென் பகுதியில் கடந்த 48 மணி நேரத்தில் 6 பேர் கொல்லப்பட்டனர்.

ஹொறவப்பொத்தானை, மதவாச்சியா, இரத்தினபுரி, பொலன்னறுவ, கம்பஹா ஆகிய இடங்களில் இந்த வன்செயல்கள் இடம்பெற்றன.

தென் பகுதி மாகாண சபைகளில் அங்கம் வகிக்கும் 2 உறுப்பினர்களின் வீடுகளும் தாக்கப்பட்டன. (ஓ-எ)

# எம்.எல்.ஏ. பதவியை ஜெயலலிதா உண்மையாக ராஜினுமா செய்தாரா?

## தமிழகத்தில் நேற்று பெரும் அரசியல் "கலகம்"

சென்னை, மார்ச் 20

அ.தி.மு.க செயலாளர் செல்வி ஜெயலலிதா தமது சட்டசபை உறுப்பினர் பதவியை ராஜினுமாச் செய்து விட்டதாக வெளிவந்த செய்திகள் தமிழகத்தில் நேற்றுப் பெரும் அரசியல் 'கலகம்' ஒன்றை உருவாக்கி இருந்தது.

அது குறித்து செல்வி ஜெயலலிதா, முதல்வர் திரு மு. கருணாநிதி, சபாநாயகர் திரு தமிழ்க்குடிமகன் ஆகியோர் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தினர்.

### ★ ஜெயலலிதா சொல்வது...

அரசியலில் இருந்து ஓய்வு பெறப்போவதாக நான் எந்த அறிக்கையும் எனது அலுவலகத்தில் இருந்து செய்தித்தாள்களுக்கு அனுப்பவில்லை.

செய்தியாளருக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் செல்வி ஜெயலலிதா முன்கண்டவாறு தெரிவித்தார்.

அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது;

சட்டசபை உறுப்பினர் பதவியில் இருந்து விலகிவிடுவதாக எந்தவிதமான கடிதத்தையும் சபாநாயகருக்கு எந்த முறையிலும் நான் அனுப்பவில்லை.

எனது கட்சிப் பிரமுகர்களின் வேண்டுகோளுக்கு இணங்க, நான் முன்னதாகத் தயாரித்த ராஜினுமாக் கடிதத்தையும் அறிக்கையையும் செய்தித் தாள்களுக்கு அனுப்ப வேண்டாம் என்று உதவியாளர் நடராஜனைக் கேட்டுக் கொண்டேன். அவற்றை இம் மாதம் 15ஆம் திகதியே உதவியாளர் நடராஜனிடம்

5 ஆம் பக்கமும் பார்க்க

கொடுத்துவிட்டேன்.

பொலீஸாரை தமிழக அரசு சட்டவிரோதமாகப் பயன்படுத்தி இந்த பதவி விலகல் கடிதத்தையும் அறிக்கையையும் திரு. நடராஜன் வீட்டில் இருந்து எடுத்து செய்தித்தாள்

[6ஆம் பக்கம் பார்க்க]

### ★ முதல்வர் கருணாநிதி

சென்னை, மார்ச் 20

ஜெயலலிதா விவகாரம் குறித்து நேற்று தமிழக முதலமைச்சர் கருணாநிதி கருத்து வெளியிட்டார்.

அவர் சொன்னதாவது;

ஜெயலலிதா அரசியலை விட்டு விலகுவதாகத் தயாரித்து அறிக்கை வெளியிட்ட சம்பவத்திற்கும் அவரின் ராஜினுமாவுக்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை.

எனக்கோ, அல்லது எனது அரசுக்கோ இதில் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. யாரையும் முறைகேடான வகையில் சட்டசபை உறுப்பினர் பதவியில் இருந்து துரத்தும் மனப்பான்மை தி.மு.க அரசுக்குக் கிடையாது.

இந்த விவகாரம் அ.தி.மு.கவிற்குள் ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடியின் விளைவாக இருக்கக்கூடும்.

இத்தகைய ராஜினுமாவையும் அரசியல் துறப்பு அறிக்கையையும் தயார்செய்யவேண்டிய அவசியத்திற்கு அந்தக் கட்சியில் நிலைமை உருவாகி இருக்கிறது.

இப்படி முதலமைச்சர் கருணாநிதி கருத்து வெளியிட்டார். (ஓ-எ)

### ★ சபாநாயகர் நிலைப்பாடு

சென்னை, மார்ச் 20

ஜெயலலிதாவின் சட்டசபை உறுப்பினர் பதவி விலகல் கடிதம் பற்றி அவரிடம் தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர் டாக்டர் தமிழ்க் குடிமகன் விளக்கம் கேட்டிருக்கிறார்.

ஜெயலலிதாவிடம் இருந்து பதில் வந்த பிறகே அவரது இராஜினுமா பற்றி தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சபாநாயகர் தமிழ்க்குடிமகன் தெரிவித்தார்.

திரு. தமிழ்க் குடிமகன் மேலும் சொன்னதாவது;

சட்டசபையின் விதிகளின் படி இந்த இராஜினுமாக் கடிதம் சொந்த விருப்பத்தின்

(6ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



உந்தக் கதையளைக் கேட்டால், தமிழ்ச் சினிமாப் படங்களிலை வாற மாதிரி எல்லோ இருக்குது. என்னெண்டாலும் நடிகையும் வசனகர்த்தாவும் தானே ...!

## ஜே. வி. பியின் எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 20

வடமத்திய பிராந்திய பிரதிப் பொலீஸ் மா அதிபர் பிரேமதாஸ உடுகம்பொலவை உடனடியாக அகற்றவேண்டும் என்று ஜே. வி. பியின் இராணுவப் பிரிவான தேசப்பிரேமி ஜனதா வியாபாரய (டி. ஜே. வி.) எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

இதனிடையில் அனுராதபுர மாவட்டத்தில் தீவிரவாத சக்திகளுக்கு எதிராக நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தும்படி பிரதிப் பொலீஸ் மா அதிபர் திரு. உடுகம்பொல தனது படையினருக்கு உத்தரவிட்டிருக்கின்றார். (ஓ-எ)

## வேண்டாம் என்ற நிலை இல்லை; ஆனால்-

# சர்வசன வாக்கெடுப்பை உடனடியாக நடத்தக்கூடாது

## இது இந்திய அதிகாரிகள் கருத்து

புதுடில்லி, மார்ச் 20

வடக்கு-கிழக்கு இணைப்புச் சம்பந்தமான சர்வசன வாக்கெடுப்பு உடனடியாக நடத்தப்படக் கூடாது.

-இப்படி இந்திய அதிகாரிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சர்வசன வாக்கெடுப்பு என்றைக்குமே வேண்டாம் என்பது அல்ல இந்தியாவின் நிலை. சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படத்தான் வேண்டும்; இன்னும் ஓராண்டு கழித்துத்தான் அது நடத்தப்பட வேண்டும்.

வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாகம் ஸ்திரமாகுவதற்கு சந்தர்ப்பம் கொடுத்த பின்னரே சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று இந்திய அதிகாரிகள் கருதுவதாக புதுடில்லி வட்டாரங்களில் தெரிவிக்கப்பட்டது.

# நிர்ணயிக்கப்பட்ட திகதியில் நடந்தே தீரும் என்கிறார் 'விஜே'

கொழும்பு, மார்ச் 20

நிர்ணயிக்கப்பட்ட திகதியில் வடக்கு-கிழக்கு நிரந்தர இணைப்புக்கான சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படும்.

இவ்வாறு உள்நாட்டலுவல்கள் மற்றும் மாகாண சபை அமைச்சர் திரு. யு. பி. விஜேக்கூன் நாடாளுமன்றத்தில் சொன்னார்.

சுதந்திரக் கட்சி எம். பி. திரு. லக்ஷ்மன் ஜெயக்கொடியின் கேள்வி ஒன்றுக்குப் பதில் அளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு சொன்னார்.

திரு. ஜெயக்கொடியின் கேள்வி வருமாறு:-

வடக்கு-கிழக்கு சர்வசன வாக்கெடுப்பு 'கூட்டு மொத்தமான மோசடி' ஆக இருக்கப்போகிறது என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே சர்வசன வாக்கெடுப்பு நடத்துவது சம்பந்தமான ஒழுங்குகளை அமைச்சர் விவரமாகத் தெரிவிப்பாரா?

அமைச்சர் விஜேக்கூன் அளித்த பதில் வருமாறு:-

வடக்கு-கிழக்கு சர்வசன வாக்கெடுப்பை கண்காணிப்பதற்கு இந்திய அவதானிகள் குழு அல்லது சர்வதேச அவதானிகள் குழு அழைக்கப்பட வேண்டும் என்று இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் கிடை

(6ஆம் பக்கம் பார்க்க)

# ரயிலுடன் மோதி சென்றியை தாக்கிய லொறி!

## ஆனையிறவில் நடந்த விபத்து

கிளிநொச்சி, மார்ச் 20

ஆனையிறவு தடை முகாம் பகுதியில் பொருள்களை ஏற்றி வந்த லொறி ஒன்று ரயிலுடன் மோதுண்டு பலத்த சேதமடைந்தது. இந்த விபத்தில் இருவர் காயமடைந்தனர்.

கொழும்பில் இருந்து வந்த தனியார் பஸ்ஸில் பயணம் செய்த ஒருவரும் — தடை முகாம் சோதனைக்காக பஸ்ஸைவிட்டு இறங்கி நடந்து செல்கையில் — இவ் விபத்தில் சிக்கி படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுக் காலை 8.40 மணியளவில் இடம் பெற்றது.

படையினரின் சோதனைக்காக தண்டவாளத்துக்கு அப்பால் உள்ள மைதானத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட லொறியே, பின்னர் தண்டவாளத்தை மீண்டும் கடந்து வீதிக்கு வர முற்படுகையில் விபத்துக்குள்ளானது.

ரயிலுடன் லொறியின் பின் பகுதி மோதுண்டதும் லொறி தூக்கி வீசப்பட்டது. லொறியின் ஒரு பகுதி அருகில்இருந்த

(6-ஆம் பக்கம் பார்க்க)

# குமுழமுனை வாசிகள் 'பாஸ்' பெற்றே உணவுப்பொருள்களை வாங்கலாம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

குமுழமுனை, அலம்பில், செம்மலை, நான்காம்கட்டை ஆகிய இடங்களில் உள்ளவர்கள் முல்லைத்தீவுக்குச் சென்று உணவுப் பொருள்களை வாங்கவர விசேட "பாஸ்" பெறவேண்டும்.

இப்பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கும், இந்தியப் படையினருக்கும் இடையில் பலத்த மோதல் நடைபெற்று வருகிறது என்பதும் —

இதன் காரணமாகக் குமுழமுனைப் பகுதியிலிருந்த ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர்ந்து அலம்பில், செம்மலை, நான்காம் கட்டை ஆகிய பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ளனர் என்பதும் தெரிந்ததே.

இவர்கள் 6 மைல் தொலைவிலுள்ள முல்லைத்தீவுக்குச் சென்று பொருள்களை வாங்கி வருவதற்கு விசேட 'பாஸ்கள்' பெறவேண்டியுள்ளது.

'பாஸ்' பெறும் ஒருவர் 2 கிலோ அரிசி மற்றும் சில அத்தியாவசிய பொருள்களை மட்டுமே கொண்டுசெல்ல அனுமதிக்கப்படுகிறதாம்.

இத்தகவல்கள் நேற்றுநடைபெற்ற யாழ். செஞ்சிலுவைச் சங்க வருடாந்தக் கூட்டத்தில் அங்கிருந்துவந்த பிரதிநிதிகளினுல் தெரிவிக்கப்பட்டன.

(ஓ-9)

## பாதுகாப்புப் படையினர் அல்லாதோர்

# ஆயுதங்கள் வைத்திருப்பதை கட்டுப்படுத்துவது குறித்து மாநாடு

## வடக்கு, கிழக்கு மாகாண பொலீஸ் தலைவர் கூட்டுகிறார்

கொழும்பு, மார்ச் 20

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புப்படையைச் சேராதவர்கள் ஆயுதங்கள் வைத்திருப்பதைக் கட்டுப்படுத்துவது குறித்து பேச்சு நடத்த எல்லா இயக்கத்தினருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாண பொலீஸ் துறைத் தலைவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

எதிர்வரும் 27 ஆம் திகதி இது குறித்து பேச்சுக்கள் நடைபெறும் என்றும் இப்பேச்சுக்களில் கலந்து கொள்ளும்படி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வடக்கு- கிழக்கு மாகாண நிதியமைச்சர் திரு. பெ. கிருபாகரன் கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலைத் தெரிவித்தார் என்று ஏஜன்சிச் செய்திகள் தெரிவித்தன.

திரு. கிருபாகரன் மேலும் சொன்னதாவது:—

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் மீண்டும் அமைதிப் பேச்சுக்களைத் தொடங்கும் முயற்சியில் எனது அரசு ஈடுபடும்.

விரைவில் ஈ. பி. ஆர், எல். எவ். இயக்கத்தைச் சேர்ந்த மூத்த தலைவர் ஒருவர் லண்டனுக்குச் சென்று திரு. அன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

புதிய நிலையிலுள்ள சிங்கர் (Singer) நடுத்தர Deep Freezer விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும்: அன்பகம், ராஜ வீதி, சட்டநாதர் கோவிலடி, நல்லூர். (10107)

Toshiba T. V. Show-case, அலுமாரி, கட்டில், கபேட், கசற் றேடியோ, கண்ணாடி மேசை, Fan, Type-writer, மேசைகள் மற்றும் பல உடன் விற்பனைக்குண்டு. நடராஜா குருக்கள் வாசம், வீரமாகாளி அம்மன் கோயில் வளவு, நல்லூர். (10106)

**ஆடு விற்பனைக்கு**

இரண்டு நல்ல இன ஆட்டு கடாக்கள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: திருமதி ஆச்சியம்மா, மாக்கற் வீதி, சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம். [10063]

**தேவை**

யாழ். ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள ஸ்தாபனத்திற்கு விற்பனையாளராக பணி புரியக் கூடிய பெண்கள் தேவை. தங்களைப் பற்றிய விபரத்துடன் சொந்தக்கையெழுத்தில் கீழ்க்காணும் முகவரிக்கு விண்ணப்பிக்கவும். 462, C/o, உதயன், யாழ்ப்பாணம். (10070)

அனுபவம்வாய்ந்த (Steward) பரிமாறுவோர், (Kitchen Assistant) சமையல் அறை உதவியாளர்கள், Gardener தேவை. நேரில் வரவும். Old Park Chinese Restaurant 207, Old Park Road, Chundukuli Jaffna. [10073]

கோழிப்பண்ணையில் கடமையாற்ற அனுபவம் வாய்ந்த தொழிலாளர் காவலாளி தேவை. தங்குமிட வசதியும் உண்டு. சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. நேரில் வரவும். 207, Old Park Road, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். [10074]

**திருத்துநர் தேவை**

வானொலி திருத்துவதில் அனுபவம் மிக்கவர் உடன்விண்ணப்பிக்கவும். விண்ணப்பிக்க வேண்டிய முகவரி: Sopiga Electronics, Yogapuram. (10087)

**WANTED**

Female Accounts Trainees with a minimum Qualification of two parts in I.C.M A. or Equalent for our Colombo office free transport with meals subsidised Apply or Call Personely after 22 nd Agro Marine Ltd. 35, Bank shall Street Jaffna. (10090)

**தவறிவிட்டது**

திருமதி சிவஞானலட்சுமி கந்தவேள் ஆகிய எனது பேர்சுடன் அடையாள அட்டை இல. 548202817 V 6-3-1989 அன்று இல: 769 மினி பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஓவசியர் லேன், பிரதான வீதி, தெல்லிப்பழை. என்ற விலாசத்துக்கு ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (10088)

**சேவை**

வாடிக்கையாளர்களின் வசதியைக்கருதி எமதுஸ்தாபனம் தினமும் இரவு 9 மணிவரை திறந்து இருக்கும் Old Park Chinese Restaurant Chundukuli, Jaffna. (10075)

**P. V.C குழாய்கள்**

P.V.C. குழாய்கள் பொருத்திகள் பழையதும் புதியதும் 3/8'' தொடக்கம் 10'' வரையும் சகல அளவுகளிலும் பெற்றுக்கொள்ளலாம். 'Tungsram, Electric Bulbs, House Pipes, Alkathene Pipes, Bibtaps, Foot Valves, Gate Valves, G I. Roofing bolts, & Nuts in all sizes, M. S. Washers, Brass welding rods, Wire netting இவை மட்டுமல்ல இன்னும் எது வேண்டுமென்றாலும் குறுகிய காலத்தில் வரவழைத்துக் கொடுக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய இடம்; S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (C1910)

**A/L 91 இரசாயனம்**

108, Brown Road, Jaffna A/L 91 இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம்: 23-3-1989 வியாழன் 6.30 a.m செவ், வியா 6.30 a.m அடுத்தபிரிவு ஆரம்பம்: 25-3-1989 சனி 11.00 a.m சனி. ஞாயிறு 11.00 a.m (10089)

**SPOKEN ENGLISH**

தூர இடங்களிலிருந்து வருபவர் வசதியையிட்டு புதிய பிரிவு ஆரம்பம் 23- 3- 89 செவ்வாய்/ வியாழன் நாட்களில். நேரம் 10.30 - 12.00 மணிவரை. S. B. Iyar, 12 வைமன் வீதி, நல்லூர். [9869]

**TYPEWRITERS**

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும், விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும் தமிழ் ஆங்கில டைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises, 39/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C/1876)

**வேலை வாய்ப்பு**

கனடாவில் தாதிமாருக்குத் தட்டுப்பாடு. தராதரமுள்ளவர் எங்கள் உதவியுடன் பதிவு செய்யலாம். கட்டணம் யாதுமில்லை. Frajmal Enterprises, 93 Second Cross Street. Jaffna. (C/1960)

**STENOGRAPHER**

Stenograhper with Knowledge of Accounts is requir ed to work in an establish ment which has its head Office in Colombo. Please apply No, 464, C/o. Uthayan before 30 th March ( /1974)

**NEW CITY TRADERS**

சகல விதமான வீட்டு மின் உபகரணங்கள், வயரிங் பொருள்கள், Rice Cooker, Gas Cooker. Fan, Ceiling Fan, Hot Plate மூன்று சில்லு சைக்கிள், பிளாஸ்ரிக் விளையாட்டுப் பொருள்கள், எவர் சில்வர், சில்வர் பொருள்கள் சைக்கிள் உதிரிப்பாகங்கள், மணிக்கூட்டு வகைகளுக்கு: New City Taders, 135, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம். (C1838)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

### புதிய மாணவர்கள்

## 1988/89 கல்வி ஆண்டு

இப் பல்கலைக்கழகத்திற்கு கலை, விஞ்ஞான பீடங்களுக்கு 1988 / 89 கல்வி ஆண்டிற்குத் தெரிவுசெய்யப்பட்ட சகல மாணவர்களுக்கும் ஆங்கிலப் பயிற்சி நெறி ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி ஆரம்பமாக இருக்கின்றது. ஆகவே புதிய மாணவர்கள் அனைவரும் இத் திகதியன்று பல்கலைக்கழகத்திற்கு சமூகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர். இப் பயிற்சி நெறி மேற்படி சகல மாணவர்களுக்கும் கட்டாயமானதாகும்.

மருத்துவபீட மாணவர்களுக்கு ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி விரிவுரைகள் ஆரம்பமாகின்றன. எனவே அவர்கள் அனைவரும் இப்பல்கலைக்கழக மருத்துவ பீடத்திற்கு அன்றைய தினம் சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதில் பதிவாளர்.
(C/1963)

இளை
திருநெல்வேலி
## A/L 91


அரசியல்: சுந்தரமூர்த்தி
வரலாறு:- நாகராசா
ஆரம்பம் 20-03-1989
[சி/1564]

## வணிகப்பட்டதாரி ஆசிரியருக்கான வெற்றிடம்

தகுதியான வணிகப்பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன. விண்ணப்பிக்க விரும்புவோர் சுய விபரங்களுடன் 07- 04- 89 க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். தகுதியான சம்பளம் வழங்கப்படும். பரீட்சை முடிவுகளை எதிர்பார்ப்பவர்களும் விண்ணப்பிக்கலாம்.

அதிபர்.
யாழ்ற்றன் கல்லூரி,
காரைநகர்.
(10352)

## இரண்டாவது ஆண்டு நிறைவு நாள்



பிறப்பு:
11 - 6 - 1924

இறப்பு:
11 - 4 - 1987

### தம்பையா பொன்னம்பலம்

(இளைப்பாறிய ஊழியர்)

திதி: 20. 3. 89

என்றும் குடும்பத்தின் ஒளிவிளக்காய் மகிழ்ச்சியோடு வாழ்ந்து இடை நடுவில் எம்மை ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்ற எங்கள் அன்புத் தெய்வமே! நீர் சென்று இரு ஆண்டு நிறைவடையும் இவ் வேளையில் தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்:
மனைவி: கமலம்,
பிள்ளைகள்: பவானி B.A. [கனடா], பவானந்தன் [கனடா],
மருமகன்: செல்வச்சந்திரன் [கனடா].

15 ஆம் கட்டை,
உடுப்பிட்டி.
[10115]

## 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு:
21- 10- 1945

இறப்பு:
25- 03- 1986

திதி:
20- 03- 1989



### மாணிக்கம் துரைராசா

(S. M. T., பிரபல வர்த்தகர், கிளிநொச்சி)

அன்பின் திருவுருவாய்! அறிவின் சுடரொளியாய்! பாசத்தின் உறைவிடமாய்! சிரிப்பில் நிறைமதியாய்! அந்தியும் பகலும் அயராது உழைத்து குடும்பத்தைக் கோயிலாக்கி மகிழ்ச்சியோடு வாழ்ந்து இடை நடுவில் எம்மை ஆறுத்துயரில் ஆழ்த்திவிட்டுச் சென்ற எமது அன்புத் தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

தங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
தாய், மாமி, தம்பிமார், சகோதரிகள்,
மைத்துனர்கள், தொழிலாளர்கள்.

S. M. T. இல்லம்,
அக்கரேவலி வடக்கு,
அக்கரேவலி.

## ஆங்கிலக் கல்வி வகுப்புக்கள்

சுன்னாகம் மார்ச் 20

குரும்பசிட்டி சன்மார்க்க சபையினரால் அப்பகுதி மாணவர்களின் கல்வித்தரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் ஆங்கிலக் கல்வி வகுப்புக்கள் நோன்மதி தினமான 21 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை பி. ப. 3. 00 மணிக்கு அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் படும்.

சித்திர வித்தியாதிகாரி கலாகேசரி ஆ. தம்பித்துரை தலைமையில் நிகழும் இவ்விழாவை யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத் துறை போதனாசிரியர் திரு. செ. கமலாகரன் ஆரம்பித்து வைக்கின்றார். (ச-27)

## நூல் வெளியீடு

அபிராமியந்தாதி இருபத்தேழாவது செய்யுளுக்குரிய ஆய்வுரையும், கம்பருக்கு கலைவாணியின் அருட்கடாட்சபட விளக்கமும் கொண்ட நூல் ஒன்றை சிவராத்திரி தினத்தன்று வழக்கம் பறை பஜனைச் சபையினர் வெளியிட்டனர். ]க- 28]

## நிவாரணப் பொதிகள்

குருநகர், மார்ச். 20

கொக்குவில் பொற்பதி பகுதியில் சமீபத்தில் பாதிக்கப்பட்ட 42 குடும்பங்களுக்கு சர்வோதயம் நிவாரண உதவிப் பொதிகளை வழங்கியது.

அரிசி, மா, சீனி, பால்மா, செத்தல், தேயிலை, சவர்க்காரம், தீப்பெட்டி, அடங்கிய பொதிகள் ஒவ்வொன்றையும் சர்வோதய ஊழியர்கள் கடந்த 14 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை அக் குடும்பங்களுக்கு எடுத்துச் சென்று வழங்கினர். (க- 51)

யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை

## விஞ்ஞான பீட இரண்டாம் அரை ஆண்டுப் பரீட்சைகள்-1988

கீழ்க் கூறப்பட்ட பரீட்சைகள் பின் வரும் திகதிகளில் நடைபெறும்.

| | தொடக்கம் | முடிவு |
|---|---|---|
| முதலாம் ஆண்டு | 27. 3. 89 | — 01. 4. 89 |
| இரண்டாம் ஆண்டு | 03. 4. 89 | — 11. 4. 89 |
| மூன்றும் ஆண்டு | 08. 4. 89 | — 19. 4. 89 |
| நான்காம் ஆண்டு | 21. 4. 89 | — 29. 4. 89 |

[C-1964]
- பதில் பதிவாளர்

நானுட்டான் ப.ப.நோ.கூ. சங்கம். - முருங்கன்

## கிளைக்குழுத் தேர்தல் வாக்காளர் இடாப்பு பூர்த்தியாக்கல்

எதிர்வரும் கிளைக்குழுத் தேர்தலுக்காக நானுட்டான் ப. ப. நோ கூ. சங்க சகல கிளைகளினதும் அங்கத்தவர்கள் இடாப்பு கிளைக்குழுத் தேர்தலுக்காக 31- 03- 89 முடிய பூர்த்தி செய்யப்பட்டு அதில் உள்ள அங்கத்தவர்கள் கிளைக்குழுத் தேர்தலுக்கு வாக்களிக்க தகுதி உடையவர்கள் ஆவர். எனவே சகல கிளைகளிலும் அங்கத்துவ விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்று அங்கத்வர்களாகச் சேர்ந்து கொள்ளுமாறு கேட்கப்படுகின்றீர்கள்.

பி. ச. செல்வம்
செயலாளர்.

நானுட்டான் பகுதி ப. நோ. கூ. சங்கம்,
முருங்கன்,
10- 03- 1989
[C/1975]

# W. M மெண்டிஸ் அன் கோ

### லிமிற்டெற்

## புதிய விலை விபரம்:

**17-3-89 தொடக்கம் யாழ் மாவட்டத்தில் எமது உற்பத்திப் பொருட்களின் சில்லறை விலை வருமாறு:**

| | | | |
|---|---|---|---|
| | மென்டிஸ் எக்ஸ்ரா ஸ்பெஷல் போத்தல் | | 123 - 00 |
| | மென்டிஸ் ஸ்பெசல் | போத்தல் | 102 - 00 |
| | மென்டிஸ் ஸ்பெசல் | ½ | 55 - 50 |
| | மென்டிஸ் ஸ்பெசல் | ¼ | 31 - 00 |
| ★★ | மென்டிஸ் கோல் லேபல் | போத்தல் | 88 - 00 |
| | மென்டிஸ் கோல் லேபல் | ½ | 50 - 50 |
| | மென்டிஸ் கோல் லேபல் | ¼ | 30 - 00 |
| ★★ | மென்டிஸ் றெட் லேபல் | போத்தல் | 74 - 00 |
| | மென்டிஸ் றெட் லேபல் | ½ | 42 - 50 |
| | மென்டிஸ் றெட் லேபல் | ¼ | 26 - 50 |
| ★★ | மென்டிஸ் வெட் 88 | போத்தல் | 81 - 00 |
| | மென்டிஸ் வெட் 88 | ½ | 47 - 50 |
| | மென்டிஸ் வெட் 88 | ¼ | 28 - 00 |
| | மென்டிஸ் பிரண்டி | போத்தல் | 173 - 00 |
| | மென்டிஸ் பிரண்டி | ¼ | 48 - 00 |
| | மென்டிஸ் ஜின் | போத்தல் | 143 - 00 |
| | மென்டிஸ் ஜின் | ¼ | 40 - 50 |
| | மென்டிஸ் றம் | போத்தல் | 143 - 00 |
| | மென்டிஸ் வொட்கா | போத்தல் | 148 - 00 |
| | ரொசாவின் கோப்பிபானம் | ½ போத்தல் | 65 - 00 |

இவற்றை கொள்வனவு செய்யும் போது வெற்றுப் போத்தல் ஒப்படைத்தல் வேண்டும். அல்லது ரூபா 6/- அறவிடப்படும்

**யாழ் ஏக விநியோகஸ்தர்கள்:**

## ★ "வாமாஸ்" ★

121/2, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவுனியா சந்தைக் கட்டட வேலை உடனடியாக ஆரம்பிக்க முடிவு

வவுனியா, மார்ச். 20

வவுனியா சந்தைக் கட்டட வேலைகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு வவுனியா அரசாங்க அதிபர் திரு. த. லங்காநேசன் வவுனியா நகரசபைச் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளார்.

வவுனியாக் கச்சேரியில் நடைபெற்ற புனர்நிர்மாண இணைப்புக் குழுக் கூட்டத்திலேயே அரசாங்க அதிபர் இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

கூட்டத்தில் முதல் முறையாக மாகாண சபை உறுப்பினர்களான திருவாளர்கள் ஐ. யசோதரன், சி. சிவபாலராஜா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

திரு. ஐ. யசோதரன் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது; வவுனியா மாவட்டத்தின் அபிவிருத்திக்காக அரசாங்க அதிபர் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு சகல திணைக்களங்களின் தலைவர்களும் அதிகாரிகளும் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

புனர் வாழ்வு, புனர் நிர்மாணவேலைகளைச் செயற்படுத்துவதில் ஏதாவது தடைகள் ஏற்படுமானுல் அவைகளை நீக்குவதற்கு நாம் தயங்க மாட்டோம்.

அத்தகைய தடைகளை எமது கவனத்துக்கு உரிய அதிகாரிகள் கொண்டுவந்தால் நாம் பூரணமான ஒத்துழைப்பைக் கொடுக்கத் தயாராக உள்ளோம்.

இப்படி அவர் கூறினுர்.

கூட்டத்தில் புனர்வாழ்வு நடவடிக்கைகள் பற்றி விரிவாக ஆராயப்பட்டது.

புதிய சந்தைக் கட்டடம் கட்டுவதற்கென 60 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த போதும் வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை என்றும்—

நொருட் நிறுவனத்தினுல் வவுனியா கல்வித் திணைக்களத்துக்கு வழங்கப்பட்ட 9 லட்சம் ரூபா உபயோகிக்கப் படவில்லை என்றும் மாகாண சபை உறுப்பினர்கள் கண்டனமும் அதிருப்தியும் தெரிவித்தனர்.

1983 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலைமைக்கு இ. போ. ச. பஸ்சேவையைக் கொண்டு வரமேலும் ஏழு பஸ்கள் தேவை எனவும் அவைகளைப் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமெனவும் இக் குழு அமர்வின் போது வேண்டுகோள் விடுக்கப்பட்டது. (ச)

## திறந்த பல்கலைக்கழக மத்திய நிலையம்

மட்டக்களப்பில் திறந்த பல்கலைக்கழகத்தின் மத்திய நிலையம் இம்மாதம் 25 ஆம் திகதி திறந்து வைக்கப்பட உள்ளது.

பார் வீதியிலுள்ள கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்திற்குச் சொந்தமான கட்டடமொன்றில் இந்நிலையம் இயங்கும்.

கம்பியூட்டர், கல்வி டிப்ளோமா, ஆங்கிலம் போன்ற பாடநெறிகள் இங்கு ஆரம்பிக்கப்படவுள்ளன. (ச-21)

## கண்டனம்

வவுனியா, மார்ச் 20

முன்னுள் புளொட் உறுப்பினரான நிரஞ்சன்[விஜி]கொலை செய்யப்பட்டதை ஈ. என். டி. எல். எவ். கண்டித்துள்ளது.

இதுசம்பந்தமாக வவுனியா ஈ. என். டி. எல். எவ். அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. [ஒ-164]

# இரசாயன தொழிற்சாலை மூடப்படமாட்டாது

பரந்தன் இரசாயன தொழிற்சாலை மூடப்படமாட்டாது.

இந்த வாக்குறுதியை கைத்தொழில் அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா ஈழமக்கள் புரட்சிகர விடுதலைமுன்னணியைச் சேர்ந்த யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கா. யோகசங்கரிக்கு அளித்துள்ளார்.

திரு. யோகசங்கரி பரந்தன் இரசாயன கூட்டுத்தாபன தொழிலாளர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் தொழிற் சாலை தொடர்ந்து இயங்க வேண்டிய அவசியம் பற்றியும் அமைச்சருடன் பேச்சுவார்த்தைகள் நடத்திய போதே முன்கண்ட வாக்குறுதி வழங்கப்பட்டது. (ச)

## பிறப்புச் சான்றிதழ் வேலை ஸ்தம்பிதம்

கல்முனை பெரும்பாகப் பதிவாளர் அலுவலகத்தில் பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதற்கான சான்றிதழ் புத்தகத்திற்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாடு காரணமாக பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கும் வேலைகள் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

இதனுல் பிறப்புச்சான்றிதழ்கள் கோரி அந்த அலுவலகத்திற்குப் படையெடுக்கும் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

## இலவச முதலுதவி பயிற்சி

யாழ்- மாவட்ட அத்தியட்சகர் பிரிவின் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் பிரிவினரால் இலவசமாக வழங்கப்பட இருக்கும் இரண்டாம் பயிற்சி ஆரம்பமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

15 வயதுக்கு மேற்பட்ட இருபாலாரும், ஆரம்ப வருடத்தில் சித்தியடைந்த பாலர் கல்விக்கழக ஆசிரியர்களும் 'ஞானக் குழந்தை இல்லம்' யாழ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்புகொள்ளுமாறுகேட்கப்பட்டுள்ளனர். (ச-51)

## கட்டைப்பிராய் பகுதியில் ஆயுத பாணிகள் கொள்ளை

யாழ்ப்பாணம், மார்ச் 20

கட்டைப்பிராயில் உள்ள வீடொன்றினுள் புகுந்த கொள்ளையர்கள் வீட்டில் இருந்தவர்களை பயமுறுத்திவிட்டு 40ஆயிரம்ரூபா பெறுமதியான நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 9-45 மணி அளவில் இச்சம்பவம் நடைபெற்றது.

வீட்டில் இருந்தவர்கள் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்ததாகவும் அப்பொழுது வீட்டுக்குள் நுழைந்த சுமார் 10 பேர் வீட்டில் இருந்தவர்களை ஆயுத முனையில் பயமுறுத்திவிட்டு கொள்ளையில் ஈடுபட்டதாகவும் யாழ் ஆஸ்பத்திரி பொலீஸ் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-10)

## சிரமதானம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ் மத்திய கல்லூரிலியோ கழகத்தினர் அண்மையில் யாழ் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர். (ச-5)

# செஞ்சிலுவை செயற்திட்டங்களை நோர்வே குழு பார்வையிட்டது

நோர்வே அரசாங்கஅதிகாரிகளும், நோருட் பிரதிநிதியும் நேற்று யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் செயற் திட்டங்களை நேரில் சென்று பார்வையிட்டனர்.

நோர்வே அரசாங்கத்தின் வெளி விவகார அமைச்சின் அதிகாரியான திரு. மக்னிடியூஸ், நோருட் பிரதிநிதியும் நோர்வேத்தூதரகத்தின் பிரதிநிதியுமான திருமதி விக்டிஸ் லாங்சோல்ட் மற்றுமொரு நோர்வேப்பிரதிநிதிஆகியோர் சனிக்கிழமை யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இவர்கள் யாழ். செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுடன் வீமன்காமம் பகுதியில் அமைக்கப்பட்டுவரும் வீடுகளைப் பார்வையிட்டனர். அந்தப் பகுதி மக்களுடனும் கலந்துரையாடினர்.

இன்று இவர்கள் 'றெட்பானு' செயற்திட்டங்களையும், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகராலயத்தின் செயற்திட்டங்களையும்பார்வையிடுவர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ-5]

## மடுக்கோயில் பகுதியில் இளைஞனின் சடலம்

மடுக்கோயில்பகுதியில் இளைஞர் ஒருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக வவுனியாப் பொலீஸார் தெரிவித்தனர்.

சூட்டுக் காயங்களுடன் கண்டெடுக்கப்பட்ட இளைஞரின் சடலம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை. [ஒ-164]


கலர், ஊலன், போட்டோ புளக்குகளையும்
நபர்சீல் பிளாஸ்ரிக்போட், கீரெக், லமினேசன்
வேலைகளையும்
உடனுக்குடன் செய்துகொள்ள
ஆர்ட் கிராபிக்ஸ்
538, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
வெளிப்புறப்படப்பிடிப்புகளும் ஏற்கப்படும்


## முதலாவது பிறந்ததின வாழ்த்து

20. 3. 89.



**செல்வி செ. சோபிகா**

இல. 33 ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த செல்வஞானம் ரோகிணி தம்பதிகளின் செல்வப் புதல்வி செல்வி சோபிகா இன்று தனது முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்ருர். இவரை சவூதியில் இருக்கும் அப்பா, அம்மா, அண்ணு அனுஜன், அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா பெரியம்மாமார், பெரியப்பாமார், மாமா, சித்தியார், சித்தப்பாமார், அத்தைமார், லக்ஸி அக்கா, ஜீவன் அண்ணு, பிரசாந் அண்ணு, பாட்டி மற்றும் உற்ருர், உறவினர்கள் நல்லூர் முருகன் அருள்பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்ருர்கள்.

(C/1557)

# சிறப்பாக நடந்து முடிந்த உடற்பயிற்சிப் போட்டி

## வட்டாரக் கல்வி அதிகாரி பாராட்டு

மானிப்பாய், மார்ச் 20

''எவ்வளவோ பிரச்சினைகளுக்கு மத்தியிலும் மானிப்பாய்க் கல்வி வட்டாரப் பாடசாலைகள் உடற்பயிற்சிப் போட்டிகளை சிறப்பாக நடத்தியுள்ளன. கல்வித் துறைக்கு பெரும் சேவையாக அமையும் முறையில் இப்போட்டிகளை ஒழுங்கு செய்து அவற்றில் உற்சாகத்துடன் பங்குபற்றும் அனைவரும் பாராட்டுக்கு உரியவர்கள்''

மானிப்பாய் கல்வி வட்டாரப் பாடசாலைகளின் வருடாந்த உடற்பயிற்சிப் போட்டிகளில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட வட்டாரக் கல்வி அதிகாரி (உடற் கல்வி) திரு. சு. அருணகிரிராசா இவ்வாறு கூறினுர்.

உடற்பயிற்சிப் போட்டிகள் இராமநாதன் கல்லூரியில் மேற்படி பாடசாலை அதிபர் திருமதி ஸ்ரீமதி குமாரசாமி தலைமையில் நடைபெற்றன.

மானிப்பாய் கல்வி வட்டாரத்தைச் சேர்ந்த முப்பத்தெட்டு பாடசாலைகள் உடற்பயிற்சிப் போட்டிகளில் பங்குபற்றின.

போட்டிகளில் பின்வரும் பாடசாலைகள் வெற்றியீட்டின.

### 13 வயதுக்குட்பட்டோர்

**ஆண்கள்**

1 ஆம் இடம் சுதுமலை, சிந்மய பாரதி வித்தியாலயம் 2 ஆம் இடம் மானிப்பாய் சென் ஆன்ஸ் றே. க. த. க. பாடசாலை 3ஆம்இடம்மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலயம் பெண்கள் 1 ஆம் இடம் உடுவில்மகளிர்கல்லூரி 2 ஆம் இடம் சுதுமலை சிந்மபாரதிவித்தியாலயம் 3 ஆம் இடம்இராமநாதன் கல்லூரி.

### 17 வயதுக்குட்பட்டோர்

**ஆண்கள்**

1 ஆம் இடம்சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம், 2 ஆம் இடம் மானிப்பாய் இந்துக் கல்லூரி, 3ஆம் இடம் மானிப்பாய் மெமோரியல் மகாவித்தியாலயம், பெண்கள் 1 ஆம் இடம் உடுவில் மகளிர்கல்லூரி 2 ஆம் இடம் நவாலி மகா வித்தியாலயம், 3 ஆம் இடம் இராமநாதன் கல்லூரி

### 19வயதுக்குட்பட்டோர்

**ஆண்கள்**

1 ஆம் இடம் மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலயம்2 ஆம் இடம்சுதுமலை சிந்மயபாரதி வித்தியாலயம் 3 ஆம் இடம் ஸ்கந்தவரோதாயக் கல்லூரி

**பெண்கள்**

1 ஆம் இடம் மானிப்பாய் மகளிர் கல்லூரி, 2 ஆம் இடம் இராமநாதன் கல்லூரி, 3 ஆம் இடம் மானிப்பாய் மெமோறியல் மகாவித்தியாலயம்.

முதலாம் இடத்தை பெற்றுள்ள பாடசாலைகள் இத்தவணையில் நடைபெற உள்ள மாவட்ட உடற்பயிற்சிப் [illegible] ளத் தகுதி பெற்றுள்ளதாக [illegible]


உ
கஂ பதி துணை

★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர் !

நிகழும் விபவ வருஷம் பங்குனி மாதம் 10-ஆம் தேதி [23-03-1989] வியாழக்கிழமை பகல் 11.27 மணிமுதல் 01.25 மணிவரை உள்ள ★ மிதுனலக்கின சுபமுகூர்த்த வேளையில் ★

பொ. இரத்தினம் (LATE) அவர்களின் புத்திரன் திருநிறை செல்வன் ★ உதயகுமார் ★ அவர்களுக்கும்

ந. கந்தசாமி அவர்களின் புத்திரி திருநிறை செல்வி ★ ஜெயகுமாரி ★ அவர்களுக்கும்

திருமணம் நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் சுற்றம்சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தியருள வேண்டுகின்றோம்.

★ தங்கள் நல்வரவை அன்புடன் நாடும் ★

இ. இராசமணியும் பிள்ளைகளும், மருமக்களும்
52/9, முத்தவினயகர் வீதி,
நல்லூர்.

ந. கந்தசாமியும் பாரியாரும்
அராலி தெற்கு,
அராலி.

குறிப்பு: இருவீட்டார் அழைப்பு

[9997]



உ
சிவமயம்

(விவாக சோபன விஞ்ஞாபனம்)

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விபவ வருடம் பங்குனி மாதம் 9 ஆம் திகதி புதன்கிழமை (22 - 03 - 89) காலை 9.15 மணி முதல் 11.25 மணி வரையுள்ள இடப லக்கின சுபமுகூர்த்தத்தில்

எமது புத்திரன் திருநிறை செல்வன் டாக்டர் சிவநேசன் அவர்களுக்கும்

எமது புத்திரி திருநிறை செல்வி பிரேமரஞ்சினி அவர்களுக்கும்

கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்குக் குடும்ப சமேதரராய்ச் சமூகம்தந்து மணமக்களை ஆசீர்வதித்து விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ தங்கள் நல்வரவை நாடும் ★

திரு. திருமதி. கனகரத்தினம் (ஜே. பி. யூ. எம்)
''சிவஸ்தான்''
ராஜ வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

திரு. திருமதி. சண்முகம்
27, பொஸ்வல் இடம்
வெள்ளவத்தை,
கொழும்பு - 6

[10108]



உ
கணபதி துணை

விவாக சுபமுகூர்த்த அழைப்பிதழ்

பேரன்புடையீர்,

ஸ்வஸ்திஸ்ரீ நிகழும் விபவ வருஷம் பங்குனி மாதம் 9ஆம் நாள் (22-3-89) புதன்கிழமை பூரணைத் திதியும் உத்தர நஷத்திரமும் கூடிய காலை 9-06 மணிமுதல் 11-20 மணி வரையிலான இடபலக்கின சுபவேளையில் விநாயகப் பெருமான் கிருபையால் பெரியோர்கள் ஆசியுடன்,

எமது கனிஷ்ட புத்திரன் பிரம்மஸ்ரீ சிரஞ்சீவி சுதாகர சர்மாவிற்கு

எமது ஜேஷ்ட்ட புத்திரி சௌபாக்கியவதி நித்தியானந்தியை

விவாகம் செய்ய திருவருள் பாலித்துள்ளதால் மணமகளில்லத்தில் நடைபெறும் பாணிக்கிரகணம் மாங்கல்யதாரணத்திற்கும், மணமகனில்லத்தில் அன்று காலை 6 மணிக்கு நடைபெறும் சமாவர்த்தனத்திற்கும், பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் வதூவர கிரகப்பிரவேசத்திற்கும் தாங்கள் குடும்ப சமேதரராக வந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி அழைக்கின்றோம்.

தங்கள் நல்வரவை நாடும்

பிரம்மஸ்ரீ ச. தேவராஜக்குருக்கள் குடும்பம்
மாவிசந்தி, அல்வாய் தெற்கு.

பிரம்மஸ்ரீ வே. நடராஜக் குருக்கள் குடும்பம்
சிவன்கோவில், ஆவரங்கால்.

[10111]


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "உலக தரிசனம்" கடன் வழங்கி சுயதொழில்களுக்குஊக்கமளிக்கிறது

## ஜெய்ப்பூர் உறுப்புக்கள் பாவனையாளர்கூட்டத்தில் உரை

குருநகர், மார்ச் 20

'ஜெய்ப்பூர் செயற்கை உறுப்புகளைப் பொருத்தி இருப்பவர்களும் சமுதாயத்தில் உயர்ந்த நிலைக்கு வரவேண்டும் என்னும் நல்நோக்கத்துடன் 'உலக தரிசனம்' கடன் வழங்கி சுயதொழில் முயற்சிகளுக்கு ஊக்கமளித்து வருகிறது'

செயற்கை உறுப்புகள் பாவனையாளர் சங்கக் கூட்டத்தில் கலந்து உரை நிகழ்த்துகையில் உலக தரிசன திட்ட முகாமையாளர் திரு. டானியல் சின்னத்தம்பி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

யாழ் - பழைய பூங்கா வீதியில்உள்ள ஜெய்ப்பூர் தொழிற்சாலையில் இக்கூட்டம் நடைபெற்றது.

முன்னை நாள் உதவி அரசாங்க அதிபரும், ஜெய்ப்பூர் செயற்கை உறுப்பு பாவனையாளர் சங்கத் தலைவருமான திரு. எம். பாலசிங்கம் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார்.

திரு. டானியல் சின்னத்தம்பி தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

உலக தரிசனம் குறிப்பிட்டளவு பணத்தை யாழ் - ஜெய்ப்பூர் செயற்கை உறுப்புகள் பாவனையாளர் சங்கத்திற்கு வழங்கியுள்ளது. அது உங்களுக்கு உரியதாகும்.

அப்பணத்தின் உதவியுடன் நீங்கள் வியாபார முயற்சி, கால்நடை வளர்ப்பு, விவசாய செய்கை, சிறுகைத் தொழில், சுயமுயற்சி, பன்னவேலை போன்ற உற்பத்தித் திறன் வாய்ந்த தொழில்களில் ஈடுபட்டு வாழ்க்கையை வளம்படுத்தலாம்.

முதலில் குறுகிய காலகடன்களைப் பெறலாம். வாங்கும் கடனுக்கு வட்டி அறவிடப்பட மாட்டாது. கடனை முழுமையாகத் திருப்பிச் செலுத்தி அதிக கடனைமீளப் பெறலாம்.

இக்கடன் ஆரம்பத்தில் சிறு தொகையாக இருந்தாலும் சுயதொழில் வளர்ச்சி அடைகையில் அறுபதாயிரம் ரூபா வரை கடனுகப் பெற வாய்ப்புண்டு.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

யாழ் - செஞ்சிலுவைச் சங்க தலைவரும், தெல்லிப்பழை வைத்திய அதிகாரியுமான வைத்தியக் கலாநிதி எஸ். தெய்வேந்திரம் பேசுகையில்: 'உலக தரிசனம் தாமாகவே முன்வந்து இத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்கியுள்ளது. அதனை பாதிக்கப்பட்ட ஒவ்வொருவரும் பயன்படுத்தி வாழ்வை வளம்படுத்த வேண்டும்' என்ருர்.

ஒரு நாள் வைபவமாக நடைபெற்ற மேற்படி கூட்டத்தில்வைத்திய அதிகாரிகள், உளவியல் அறிஞர்கள், ஜெய்ப்பூர் செயற்கை உறுப்புகள் நிலையப் பிரமுகர்கள் உட்படப் பலர் உரையாற்றினர். (ச-51)

## குடும்பத் தலைவி தற்கொலை

யாழ்ப்பாணம், மார்ச் 20

ஆனைக்கோட்டையில் கடந்த வெள்ளிக்கிழமை குடும்பத் தலைவி ஒருவர் கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

மரணமானவர் செந்தில்நாதன் வதனு [வயது 22] என்பவராவார்.

நேற்று ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனையும், பொலீஸ் பிரிவில் மரண விசாரணையும் நடைபெற்றன. (ஒ-10)

## விபத்தில் வயோதிபர் பலி

யாழ்ப்பாணம், மார்ச் 20

வீதியால் நடந்து சென்ற வயோதிபர் லொறி விபத்து ஒன்றில் அகப்பட்டு அந்த இடத்திலேயே மரணமானுர்.

சனிக்கிழமைகாலை நுணுவில் பகுதியில் இச் சம்பவம் இடம் பெற்றது.

பஸ் ஒன்றை லொறி கடந்து செல்ல முற்படுகையிலேயே வயோதிபர் லொறியினுள் சிக்குண்டதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ-10]

## மாகாண சபைகளிடம்

கொழும்பு, மார்ச். 20

தனியார் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் மீன் பதனிடும் குளிரூட்டப்பட்ட களஞ்சியங்கள் மற்றும் ஐஸ் களஞ்சியங்களை மாகாண சபைகளிடம் ஒப்படைக்க மத்திய அரசு தீர்மானித்துள்ளது. (இ-எ)

## கட்டாக்காலி மாடுகள்தொல்லை

கொடிகாமம் மார்ச் 20

தென்மராட்சி கிழக்குப் பகுதியை அண்டிய கொடிகாமம் கச்சாய் ஆகிய பகுதிகளில் கட்டாக்காலி மாடுகள் தோட்டங்களுக்குள் புகுந்து சேதம் விளைவிக்கின்றன.

கட்டாக்காலிகளை கட்டி வளர்க்குமாறு தோட்டக் காரர்வேண்டுகின்றனர். (ச-75)

---


## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு: 10-01-1969

உதிர்வு: 12-04-1987

**செல்வி பவானி அருணசலம்**

2ஆவது திதி: 20-03-1989

அன்புச் செல்வமே! உமது பிரிவால் துயருறும் அன்பு நெஞ்சங்கள் உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்.

நா. அருணசலம் குடும்பத்தினர்

வல்வெட்டி. (10047)

---

விண்ணுலக வாழ்வின்

## முதல் ஆண்டு நிறைவு

20-03-1988



**திருமதி பேர்ள் பத்மராஜா**

ஆண்டொன்று மறைந்தாலும் உம் நினைவுகள் எம்மை விட்டு அகலாது. இறைவன் சந்நிதியில் மீண்டும் சந்திக்கும்வரை

உம் பிரிவால் துயருறும்

கணவன், மகள், சகோதரிகள், மைத்துனர், பெறுமக்கள்.

'பெத்தனி'
வயல் வீதி,
மன்ஞர். [9861]

---

## நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



28-02-1989 இல் காலஞ் சென்ற எமது அன்புத் தெய்வம்

**கணபதிப்பிள்ளை - தம்பிராசா**

[இராணி இரும்புத் தொழிற்சாலை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு.]

அன்ஞரின் மரணக்கிரியைகளிற் கலந்து கொண்டு, அனுதாபச் செய்திகள் அனுப்பிய அனைவருக்கும் நன்றி தெரிவிக்கின்ருேம்.

அன்ஞரின் அந்தியேட்டி 19-03-1989 கீரிமலையில் நடைபெற்றது. சபிண்டீகரணமும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று 20-03-1989 திங்கட்கிழமை நண்பகல் நீர்வேலி வடக்கிலுள்ள அன்ஞரது இல்லத்தில் நடைபெறும். அத் தருணம் உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

நன்றி! அன்பு மனைவி:

நீர்வேலி. த. செல்வநாயகம்.
(10110)

---

யாழ் - பிரெஞ்சிய நட்புறவுச் சங்கத்தின்

**கலாசார பணிகள்**

வெற்றி பெறவும்

செல்வி வாசுகி ஜெகநாதனின்

## "ஓவியக் கண்காட்சி"

★ தொடரவும் வாழ்த்துகின்ருேம் ★

SHUM METAL STORES,
297, K. K. S. ROAD,
JAFFNA.

21-03-89 முதல் 25-03-89வரை

★ எமது கிளை ஸ்தாபனம் ஒன்று கண்காட்சியில் திறக்கப்பட்டிருக்கும்''

[10042]

---

வலி-கிழக்கு, தெ. ப. ப, நோ. கூ. சங்கம்

## அறிவித்தல்

வலி - கிழக்கு தென்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் 5000 வரையிலான வெற்றுச்சாக்குகள் கேள்விப் பத்திரம் மூலம் விற்பனையாகின்றன. மீளளிப்பு வைப்புப் பணமாக ரூ 250/- உம், கேள்விப் பத்திரம் ஒன்று ரூபா 1/- உம் செலுத்தி சங்க வேலை நாட்களில் கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்

**கேள்விப் பத்திரங்கள் 22-03-89 ஆம்திகதி புதன் கிழமை நண்பகல் 12.00 மணி வரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.**

பொது முகாமையாளர்.

நீர்வேலி,
1989 - 03 - 13

[C-1963]

---

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

## வெற்றுச்சாக்கு விற்பனை

எம்மிடம் 8000 சாக்குகள் வரை கேள்வி விண்ணப்பம் மூலம் விற்பனைக்குண்டு. விண்ணப்ப முடிவு திகதி 29-3-89. விண்ணப்பப் படிவங்களை காரியாலயத்தில் 30-3-89 வரை பெற்றுக் கொள்ளலாம்.

பொது முகாமையாளர்,
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்,
திருநெல்வேலி.

(C/1559)

---

## வந்து விட்டான்!

★ வாலி ★

கம்பராமாயண கதாபாத்திரங்களில் ஒருவன்!
கல்வியாளர்களின் சதா வாதத்தில் நிற்பவன்!
அகளங்கனின் கைவண்ணத்தில் நூலாகி வந்திருக்கிருன்.

★ ★ ★ ★ ★ ★

★ பல்கலைக் கழக மாணவர்கள்
★ உயர்தர (க. பொ. த) வகுப்பு மாணவர்கள்
★ கம்பராமாயண சுவைஞர்கள் அத்தனை பேருக்கும்

● அற்புத விருந்து ● ● அறிவுப் படைப்பு

வாலி

அகளங்கனின் பார்வை, ஆய்வுமுனையின் கூர்மை அனைவர் கையிலும் இருக்கவேண்டியவன்

வாலி.

பிரதிக்கு முந்துங்கள்
பிந்தி நின்று ஏமாருதீர்கள்.

பிரதி விலை ரூ 23/-
விற்பனையாளருக்கு விசேட கழிவுண்டு.

வெளியீடு:

**ஸ்ரீ லங்கா அச்சகம்**

[illegible] வீதி,
யாழ்ப்பாணம். (9868)

---

தென் இந்திய யாத்திரை-
சித்திரை மாதத்தில்

★ ★ ★ ★ ★

இலகுவாக -
இலவசமாக

அமைய வேண்டுமா?
- அரியதோர் வாய்ப்பு -
ஆலோசனைக்கு நாடுங்கள்

## துர்க்காதேவி ரூர்ஸ்,

6, நவீன சந்தை மேல்மாடி,
(மக்கள் வங்கிக்கு அருகில்)
யாழ்ப்பாணம்.

குறிப்பு:- ஒரு சில ஆசனங்களே உண்டு.

(C/1958)

---

★ கீன் ★

திருநெல்வேலி

## A/L - 91

## கலை, வர்த்தகம்

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | வரதராஜன் |
| அளவையியல் | — | S. S. மனேகரன் |
| வர்த்தகம் | — | ஜெ. ராமன் |
| கணக்கியல் | — | சௌந்தி |
| தமிழ் | — | குழந்தை |
| இந்து நாகரிகம் | — | காரை சுந்தரம்பிள்ளை |
| புவியியல் | — | இக்னேசியஸ் |
| அரசியல் | — | நாகராசா |

**ஆரம்பம்: 20-03-1989**

திங்கள் மாலை 4 மணி

[C/1922]

---

நல்லூர் ப. நோ. கூ. சங்கம்

## முக்கிய அறிவித்தல்

அங்கத்தவராகச் சேர்தலும்
வாக்காளர் இடாப்பின் முடிவுறுத்தலும்
31-3-89

எமது சங்கத்தின் அங்கத்தவர்களுக்கான வாக்காளர் இடாப்பு 31/3/1989 உடன் முடிவுறுத்தப்படும், வாக்காளர் இடாப்பில் இடம்பெற விரும்புவோர் 31/3/1989க்கு முன் ருபா 10/செலுத்தி அங்கத்தவராகச் சேர்ந்து கொள்ளலாம்.

பத்துரூபா பங்கு பூரணமாக்கப்படாத பழைய அங்கத்தவர்கள் மீதிப்பணத்தைச் செலுத்திப் பங்கினைப் பூரணப்படுத்துமாறும் அறியத் தருகின்ருேம்.

குறித்த 31/03/1989ஆம் திகதியுடன் முடிவடையும் வாக்காளர் இடாப்பை வைத்தே கிளைக்குழுத் தேர்தல் நடைபெறும்,

பொதுமுகாமையாளர்.
நல்லூர் ப. நோ. கூ. சங்கம்.

18/3/1989

(C/1560)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**செ. விஜெயரட்ணம்**

[பட வரைஞர்]

தோற்றம்: 02-06-1933 மறைவு: 18-02-1989

எமது குடும்பத்தின் ஒளியாய், பாசத்தின் உறைவிடமாய் இருந்து அமரர் ஆகிய எங்கள் தெய்வமே! எங்களை விட்டுப் பிரிந்து மாதம் ஒன்ருனுலும் எம் அகத்தினில் நீங்காத நினைவாய் இருப்பீர்கள்.

உங்கள் நினைவால் வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், தாய்,
உறவினர்.

பன்ஞலை ரோட்,
தெல்லிப்பளை. (10045)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொய்யா மொழி

**குறள்:-**

உடம்பா டிலாதவர் வாழ்க்கை குடங்குட்
பாம்போ டுடனுறைந் தற்று.

**பொருள்:-**

மனப்பொருத்தம் இல்லாதவர்கள் (உட்பகை உள்ளவர்கள்) சேர்ந்து வசிப்பது குறுகிய அறைக்குள் பாம்போடு வசிப்பதற்குச் சமானம்.

உதயன்

இல: 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805 22073
20 - 03 - 1989 த. பெ. இல்: 23

## நகரச் சுகாதாரம்

யாழ்ப்பாண மாநகரத்தில் ஒழுங்கு விதிகள் மீறப்படுவது அளவுக்கதிகமாக அதிகரித்து வருவதாக மாநகர ஆணையாளர் திரு. அன்ரன் அல்பிரட் கவலை தெரிவித்துள்ளார்.

நகரத்தின் சுகாதாரப் பிரச்சினைகளை ஆராயவும், அவற்றைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைக் கலந்தாலோசிக்கவுமென கடந்த வாரம் கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது,

அங்கு உரையாற்றும் பொழுதே ஆணையாளர் சுகாதார ஒழுங்கு விதிகள் மீறப்படுவது குறித்துக் கவலை வெளியிட்டார்.

இன்றைய நிலைமையைப் பயன்படுத்தி, ஒழுங்கு விதிகளை மீறிக் கட்டடம் அமைத்தல், கண்டவாறு குப்பை கொட்டுதல் முதலிய சீர்கேடுகள் மலிந்துள்ளன. பணச்செல்வாக்கு, அதிகாரச் செல்வாக்கு, ஆகியவற்றைப் பாவித்து தற்பொழுது தகாத செயல்கள் நடக்கின்றன.

மாநகரசபையும் அதன் ஊழியர்களும் மட்டும் இந்தச் சீர்கேட்டை நீக்க முடியாது. மக்களின் உணர்வுபூர்வமான பங்களிப்பின் மூலமே இந்தச் சீர்கேட்டை நீக்கி, நகரத்தின் சுகாதாரத்தை விருத்தி செய்யமுடியும்—இவ்வாறு திரு. அன்ரன் அல்பிரட் கருத்தரங்கில் தெரிவித்தார்.

ஆணையாளரின் கவலை காரணத்துடன் கூடியது. அவர் விடுத்துள்ள வேண்டுகோள் தேவையானது; நியாமானது; செவிசாய்க்க வேண்டியது. சுகாதாரம் மனிதனின் நல்வாழ்வுக்கு மிகவும் அடிப்படையானது. அது ஒவ்வொரு தனிமனிதனுக்கும், ஒவ்வொரு வீட்டுக்கும், ஒவ்வொரு கிராமத்துக்கும், ஒவ்வொரு நகரத்துக்கும் அத்தியாவசியமானது. அந்த வகையில் தனிமனித சுகாதாரத்திலும், குடும்ப சுகாதாரத்திலும் செலுத்தப்படும் கவனம், கிராம - நகரங்களின் சுகாதாரத்திலும் செலுத்தப்படவேண்டும்.

ஒரு மனிதனின் சுகாதாரம் கெட்டால் குடும்ப சுகவாழ்வு கெட்டுவிடும். அதே போல ஒரு மனிதன் தனது சுகாதாரத்தைப் பேணவிட்டால் (தொற்று நோய் ஆபத்துப் போன்றவற்றால்) நாட்டுச் சுகாதாரமே சீர்கெட்டுவிடும்.

ஒருவன் தனது சுகாதாரத்தைப் பேணுவதோடு மட்டும் நிற்காமல் அடுத்தவன் சுகாதாரத்தையும் கெடுக்காமல் நடந்து கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யத்தவறின் ஒட்டப்பமே வீட்டைச் சுடுவதுபோல, ஒரு தனிமனிதன் மற்றவனது சுகாதாரத்துக்குக் கேடு செய்தால் அது அவனுக்கே வினையாக முடியலாம்.

இந்த வகையில் சுகாதார ஒழுங்குவிதிகளை மீறி நடக்கும் ஒருவர், தனக்குத்தானே கெடுதல் செய்கிறார் என்பதை பூரணமாக, மனப்பூர்வமாக உணர வேண்டும். அந்த உணர்வு வந்துவிட்டால் சுகாதாரத்தைப் பேணுவதில் சுயநலமும், அடுத்தவன் சுகாதாரத்தைப் பற்றி அக்கறை இல்லாது செயற்படுதலும் ஒருவரிடம் குடிகொள்ளமாட்டா. அதாவது தனது வீட்டுக் குப்பையை அடுத்தவன் வளவில், அல்லது பொது வீதியில் கண்டபடி கொட்டும் எண்ணம் வராது.

தனிமனித சுகாதாரத்தைக் கெடுத்துக் கொள்வதும், அடுத்தவன் சுகாதாரத்துக்கு கேடு விளைவிப்பதும், பொதுச் சுகாதாரத்தைச் சீர்கெடுத்துவதும் நகரத்தில், நாட்டில் ஒரே அளவிலான கொடிய தாக்கத்தையே கொண்டுவரும்.

இதனை ஒவ்வொருவரும் மனப்பூர்வமாக உணர வேண்டும். தன்னையும், வீட்டையும், நாட்டையும் சுகாதாரமாக வைத்திருக்கப்பழக வேண்டும். அதற்காக மக்கள் நலன்நாடி அரசாங்கமோ நிர்வாகமோ மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

சுயநலத்துக்குள்ளேயே சுற்றிச்சுற்றி வட்டமிடாமல், பரந்து நோக்கி, பொதுச் சுகாதாரத்தைப் பேண செயலளவில் ஆதரவு நல்க வேண்டும். அவ்வாறு செய்யாமல் 'நாங்கள் படித்தவர்கள்' என்று சொல்லிப் பயனில்லை; அர்த்தமும் இல்லை.

## வி. பி. சிங்கின் எம். பி. பதவிக்கு வருகிறது ஆபத்து!

புதுடில்லி, மார்ச் 19

கட்சித்தாவல் தடுப்புச் சட்டத்தின்கீழ் ஜனதாதள் தலைவர் திரு. வி. பி. சிங்கின் எம். பி. பதவி பறிபோகலாம் என்று கூறப்படுகிறது.

பிரதமர் காந்தி தலைமையில் அமைச்சராக இருந்த திரு. வி. பி. சிங், காங்கிரஸில் இருந்து வெளியேறி ஜன்மோர்ச்சா எனும் கட்சியை நிறுவினார்.

பின்னர் அலஹபாத் தொகுதியில் நடந்த இடைத்தேர்தலில் திரு. வி.பி.சிங் சுயேட்சை வேட்பாளராகப் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

அண்மையில் சபாநாயகருக்கு எழுதிய கடிதத்தில், "நான் ஜனதாதள் கட்சி உறுப்பினராக இருக்கிறேன்", என்று அறிவித்திருக்கிறார்.

கட்சித்தாவல் தடைச் சட்டத்தின்கீழ் சுயேச்சை எம்.பி. ஒரு கட்சியில் சேர்ந்தால் பதவியை இழப்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி திரு. வி. பி. சிங்கின் எம். பி. பதவியும் பறிபோகும் நிலை ஏற்பட்டுள்ளதாம். (எ)

ஆலோசகர் நடராஜன் கைது:

## ஜெயலலிதா அரசியலுக்கு முழுக்கு?
## இல்லை என்கிறார் துணைச் செயலாளர்

சென்னை, மார்ச் 19

★ அரசியலில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டதாக அ.தி.மு.க. பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா வெளியிட்டதாக விடுத்த அறிவிப்பு —

★ ஜெயலலிதாவின் அரசியல் ஆலோசகர் திரு. நடராஜன் கிரிமினல் குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருப்பது —

★ ஜெயலலிதா ஓய்வுபெறவில்லை என்ற அ. தி. மு. க. துணைப்பொதுச் செயலாளர் திரு. எஸ். டி. சோமசுந்தரத்தின் அறிக்கை —

இம்மூன்று விஷயங்களும் தமிழக அரசியலில் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

**ஜெயலலிதா அறிக்கை**

அ. தி. மு. க. பொதுச் செயலாளர் பதவி, தமிழ்நாடு சட்டசபை எதிர்க்கட்சித்தலைவர் பதவி, போடிநாயக்கனூர் எம்.எல்.ஏ. பதவி ஆகியவற்றை ராஜினாமாச் செய்து செல்வி ஜெயலலிதா வெளியிட்ட அறிக்கை சென்னைப் பத்திரிகைகளில் நேற்று பிரசுரமாகியது.

அந்த அறிக்கையில், எம். ஜி. ஆரின் மறைவின் பின்னர் இதர தலைவர்களின் வேண்டுகோளின்பேரில் நான் அ. தி. மு. க. தலைமைச் செயலாளர் பதவியைஏற்றேன். இப்போது உடல்நலம் இல்லாமல் இருக்கிறேன். ஆகவே சகல பதவிகளையும் நான் ராஜினாமாச் செய்து அரசியலில் இருந்து ஓய்வு பெறுகின்றேன்' — என்று ஜெயலலிதா கூறியிருந்தார்.

**ராஜினாமா ஏற்பு**

இதனிடையில் — ஜெயலலிதா எம். எல். ஏ. பதவியில் இருந்து ராஜினாமாச் செய்யும் கடிதத்தை தமிழ்நாடு சட்டசபை சபாநாயகர் திரு. தமிழ்க்குடி மகன் ஏற்றுக் கொண்டுவிட்டார் என்று இன்னொரு செய்தி தெரிவிக்கிறது.

**நடராஜன் கைது**

இதனிடையில் — ஜெயலலிதாவின் அரசியல் ஆலோசகர் நடராஜன் கைது செய்யப்பட்டார்.

கிரிமினல் குற்றச்சாட்டு மீது அவர் கைது செய்யப்பட்டார் என்று சென்னை நகர பொலீஸ் கமிஷனர் துரை சொன்னார்.

திருச்செங்கோடு தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளராக போட்டியிட அனுமதி கோரி தனகோபால் என்பவர் விண்ணப்பித்திருந்தார்.



ஜெயலலிதா

இதற்காக 25 ஆயிரம்ரூபா பணத்தை அ. தி. மு. க. பொருளாளரிடம் தனகோபால் கொடுத்திருந்தார். அதற்கு ரசீதும் தனபாலுக்குக் கொடுக்கப்பட்டிருந்தது.

ஆனால் வேட்பாளர் நியமனம் தனபாலுக்குக் கிடைக்கவில்லை.

கடந்த மாதம் 25 ஆம் திகதி பணத்தைத் திருப்பித் தருமாறு தனகோபால், திரு. நடராஜனிடம் கேட்டார். ஆனால் நடராஜனே தன கோபாலை தனி அறைக்குள் வைத்துபூட்டி தாக்க முயற்சித்தார் என்று பொலீஸில் முறையிடப்பட்டது.

அதைத் தொடர்ந்தே நடராசன் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருப்பதாக பொலீஸ் கமிஷன் துரை மேலும் சொன்னார்.

**துணைச்செயலர் மறுப்பு**

ஜெயலலிதாவின் அரசியல் ஓய்வு அறிக்கை பற்றி அ.தி.மு.க. துணைப்பொதுச் செயலர் எஸ். டி. சோமசுந்தரம் நேற்று மாலை அறிக்கை ஒன்றை விடுத்தார்.

"ஜெயலலிதா பதவிகளை ராஜினாமாச் செய்யவில்லை; அரசியலில் இருந்து ஓய்வு பெறவும் இல்லை."

"பதவிகளை இராஜினாமாச் செய்வதாகவும் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதாகவும் ஜெயலலிதா கடிதங்களை கடந்த புதன்கிழமை தயாரித்து வைத்திருந்தார் பின்னர் அவர் மனதை மாற்றிக்கொண்டுவிட்டார்."

"ஆனால் அவரின் ராஜினாமாக் கடிதங்களை பையில் வைத்திருந்தார்."

"நடராஜனைக் கைது செய்ய வந்த பொலீஸார் அவர் வீட்டில் நடத்திய சோதனைகளின் போது இக் கடிதங்களும் அவர்களிடம் அகப்பட்டுக்கொண்டன."

"அதனைத் தொடர்ந்து அக்கடிதங்கள் பத்திரிகைகளில் பிரசுரமாகின."

"தனது எம். எல். ஏ. பதவியை ராஜினாமாச் செய்யும் கடிதத்தை ஜெயலலிதாவோ அல்லது அவரது உதவியாளரோ சபாநாயகரிடம் நேரில் கொண்டுபோய்க் கையளிக்கவில்லை.

இப்படி திரு. சோமசுந்தரத்தின் அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. (எ)

## வடமராட்சி கிழக்குப் பகுதியில்
## மீன் பிடிக்கத் தற்காலிக தடை

தாளையடி, மார்ச் 20

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கடலில் இரவுநேர மீன்பிடித்தலுக்கு மறு அறிவித்தல் வரை (தற்காலிக) தடைவிதிக்கப்பட்டுள்ளது.

மாலை 6 மணி தொடக்கம் அதிகாலை 6 மணிவரை கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல வேண்டாமென மீனவர்கள் கேட்கப்பட்டுள்ளார்கள்.

மீனவர்கள் குழுக்கள் ஊடாக இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை அமைதிப்படையினர் அதிவிரைப்படகுகளில் இப்பகுதிக் கடலில் ரோந்துச் சேவையில் ஈடுபடுவதைக் காணமுடிகிறது. (ஒ-144)

## பிறப்பு சான்றிதழ் படிவம் பற்றாக்குறை நீங்கியது

யாழ்ப்பாணம், மார்ச் 20

பிறப்புச் சான்றிதழ் வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும் பத்தாயிரம் படிவங்கள் நேற்றுயாழ்ப்பாணம்கொண்டு வரப்பட்டன. இதனால் படிவங்களுக்கான பற்றாக்குறை நீங்கியது.

யாழ். செயலக வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்தன.

கடந்த வருடம் படிவங்கள் இல்லாமையினால் சுமார் 12 ஆயிரத்திற்கும் அதிகமான விண்ணப்பங்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படவில்லை.

தற்பொழுது கொண்டுவரப்பட்டிருக்கும் படிவங்களைக் கொண்டு தேங்கிக் கிடக்கும் விண்ணப்பங்களுக்கு சான்றிதழ்கள் வழங்க முடியும்.

ஏப்ரல் மாத முற்பகுதயில் மேலும் சுமார் 9 ஆயிரம் படிவங்கள் கொண்டுவரப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-5)

## இந்திய அரசு அன்பளிப்பு

மட்டக்களப்பு, மார்ச் 20

வட-கிழக்கு மாகாண சபைக்கு அண்மையில் இந்திய அரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பொருள்களில் இரு குட்டி பஸ்கள் உட்பட ஒன்பது பஸ்கள் மட்டக்களப்பு டிப்போவிற்கு வழங்கப்பட்டுள்ளது. (ச-21)

## இஸ்லாமிய எழுத்தாளர்களின் நூல்கள்

அம்பாறை, மார்ச் 20

இலங்கை இஸ்லாமிய நூல் வெளியீட்டுப் பணியகத்தினால் இரண்டு நூல்கள் விரைவில் வெளியிடப்படவுள்ளன.

சிறுகதை ஆசிரியரும், கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி அதிபருமான ஜனாப் ஏ. எச். ஏ. பசீரின் சிறுகதைத் தொகுதி ஒன்றும்—

முன்னாள் பிரதம கல்வி அதிகாரி அல்ஹாஜ் எம். ஐ. எம். மீராலெவ்வையினால் எழுதப்பட்ட அறிவு நூல் ஒன்றுமே வெளிவரவிருக்கும் நூல்களாகும்,

மேற்படி இருநூல்களினதும் வெளியீட்டுவிழா எதிர்வரும் ஏப்ரல் மாத இறுதியில் நடைபெறவிருப்பதாகப் பணியகத் தலைவரும், கிழக்குப் பல்கலைக் கழகப் பதிவாளருமான ஜனாப் எஸ். எச். [illegible] தெரிவித்தார். (ஒ-14)

அகதிகளுக்கான:

## ஐ.நா. ஸ்தானிகராலய சேவை அளப்பரியது

### உபகரண வழங்கல் வைபவத்தில் உரை

நாம் நீண்டகாலமாக அமைதியற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அண்மைக் காலத்தில் பல்வேறு பிரச்சினைகளால் இன்னலுற்று அகதிகளாகி பிறரிடம் உதவி பெற்று வாழவேண்டிய நிலைக்கு வந்துள்ளோம். இந்நிலையில் எமது வாழ்வை சீரமைத்துப் பொலிவுறச் செய்ய அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் [illegible] இல் ஆற்றும் பணி அளப்பரியது.

அகதிகள் புனர்வாழ்வுக்காக ஐக்கிய உயர் ஸ்தானிகராலயத்தால் யாழ்ப்பாணம் கல்வித்திணைக்களத்துக்கு முறைசாரக் கல்விப் பாடங்களுக்குரிய உபகரணங்கள் வழங்கப்பட்ட வைபவத்தில் நன்றி தெரிவித்துப் பேசுகையில் யாழ் கல்வித்திணைக்களப்பிரதம கல்வி அதிகாரி திரு. கு. சோமசுந்தரம் மேற்கண்டவாறு கூறினார்.

சோவியத் பத்திரிகை அறிவிப்பு

## ஸ்டாலினின் உத்தரவின் மீதே ட்ரொட்ஸ்கி கொலை!

மாஸ்கோ, மார்ச். 19

லியோன் ட்ரொட்ஸ்கியைக் கொல்ல உத்தரவிட்டவர் ரஷ்ய சர்வாதிகாரி ஜோசப் ஸ்டாலினின் என்பதை சோவியத் பத்திரிகைகள் முதல் தடவையாக ஒப்புக்கொண்டன.

1940-ஆம் ஆண்டில் மெக்ஸிக்கோவில் வைத்து ட்ரொட்ஸ்கி கொல்லப்பட்டார்.

ஸ்டாலினின் உத்தரவின் பேரில் ரேமன் மேர்காடர் என்பவர் ஐஸ் உடைக்கும் குத்தூசியால் ட்ரொட்ஸ்கியைக் கொன்றான் என்று 'மாஸ்கோ நியூஸ்' நேற்று முன்தினம் செய்தி வெளியிட்டது.

இப்போதுதான் சோவியத் மக்கள் ட்ரொட்ஸ்கியைக் கொல்ல உத்தரவிட்டவர் ஸ்டாலினின்என்றஉண்மையை அறிந்துள்ளனர்.

ஏனைய உலக மக்கள் இதனை ஏற்கனவே அறிந்துவிட்டனர்.

தென் ஆபிரிக்க சிறையில்

## கறுப்பின போராளிகளின் உண்ணாவிரத இயக்கம்

டர்பன், மார்ச். 19

விடுதலை செய்யக் கோரி தென் ஆபிரிக்க சிறைகளில் உண்ணாவிரதமிருந்து வரும் கறுப்பு இன போராளிகளில் ஒருவரின் நிலை ஆபத்தான கட்டத்தை அடைந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

26 வயதான சான்மவித்வெ என்பவர் கடந்த 26 தினங்களாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

இந்த உண்ணாவிரத இயக்கம் கடந்த ஜனவரி 26 இல் ஆரம்பிக்கப்பட்டது. தென் ஆபிரிக்க அமைச்சரின் உறுதிமொழியைத் தொடர்ந்து கடந்த மாத ஆரம்பத்தில் உண்ணாவிரதம் கைவிடப்பட்டது.

அமைச்சர் தனது உறுதிமொழியைக் காப்பாற்றத் தவறி விட்டார். அதனைத் தொடர்ந்து மீண்டும் உண்ணாவிரதம் ஆரம்பமாகிவிட்டது.

நீதிமன்றத்தில் நிறுத்துங்கள்; அல்லது விடுதலை செய்யுங்கள் — இக்கோரிக்கையைப் முன்வைத்தே உண்ணாவிரத போராட்டம் நடத்தப்படுகின்றது.

மருந்து குடித்தாலும் உயிர் தப்ப முடியாத கடுமையான நிலையை துஸி என்றபோராளி அடைந்து விட்டதாக மனித உரிமைகள் இயக்க சட்டத்தரணிகள் சொன்னார். (எ)

## சூரிச்சில் ஆர்ப்பாட்டம்

சூரிச், மார்ச் 19

சுவிட்சர்லாந்து நகர் சூரிச்சில் நேற்று சுமார் 3 ஆயிரம் பேர் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

வீடுகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதை அரசுக்குத் சுட்டிக் காட்டவே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

## நேபாள இந்திய வர்த்தக உறவு

புதுடில்லி, மார்ச். 19

நேபாளத்துடன் புதிய வர்த்தக உடன்பாடு ஒன்றை கைச்சாத்திட தயாராக இருப்பதாக இந்தியா நேற்று அறிவித்தது. தற்போதுள்ள உடன்பாட்டை மேலும் 6 மாதத்துக்கு நீடிக்கவும் அக்காலத்தில் புதிய உடன்படிக்கையைத் தயாரிக்கலாம் என்றும் இந்தியா அறிவித்தது.

நேபாள - இந்திய உறவு அண்மைக் காலமாக சீரற்ற நிலையில் இருந்து வருவது தெரிந்ததே. (எ)

## நோயாளியின் வீட்டுக்கு டாக்டர் வந்து சிகிச்சை

### சுகாதார அமைச்சின் புதிய திட்டம்

கொழும்பு, மார்ச் 20

இனி நோயாளி டாக்டரை தேடிச் சென்று சிகிச்சை பெறத் தேவையில்லை.

டாக்டரே வீடு தேடி வந்து நோயாளிக்குச் சிகிச்சை அளிக்கும் திட்டம் ஒன்றை சுகாதார அமைச்சு தயாரித்துள்ளது.

இத் திட்டத்தின்படி கிராமங்களில் உள்ள 25 குடும்பங்களுக்கு ஒரு சுகாதார அதிகாரி என்ற அடிப்படையில் நியமிக்கப்படுவார்.

இத் திட்டத்தைச் சிறப்பாக நடைமுறைப்படுத்த சுகாதார மகளிர் விவகார அமைச்சர் ரேணுகா ஹேரத் தீர்மானித்திருக்கிறார்.

இத்திட்டத்துக்கு மாகாண சபைகளின் ஒத்துழைப்பையும் அமைச்சர் நாடியிருக்கிறார்.

மாகாண சுகாதார அமைச்சர்களின் மாநாடு ஒன்றையும் மத்திய அமைச்சர் அழைத்திருக்கிறார். (ஒ-எ)

## ஈழத்து பிரசுரங்களை சேகரிக்க மட்டு. கலாசாரப் பேரவை முயற்சி

மட்டக்களப்பு, மார்ச். 20

மட்டக்களப்பு கலாசாரப் பேரவை ஈழத்தில் வெளியாகும் நூல்கள் பிரசுரங்களைச் சேகரிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இங்கு இடம்பெறும் கலை, இலக்கிய நிகழ்ச்சிகள் வரலாற்றுப் பதிவு தொகுப்பாய்வு, மதிப்பீடு, விமர்சன அரங்கு, உசாத்துணை முதலியவற்றுக்காக கலாசாரப் பேரவை பின்வரும் பிரசுரங்களை எதிர்பார்க்கிறது

கலைவிழாக்கள், இலக்கிய நிகழ்வுகள் புத்தக வெளியீடுகள் தொடர்பாக வெளியிடப்படும் நினைவு மலர்கள், துண்டுப்பிரசுரங்கள், நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் சங்கங்கள், மன்றங்கள், கல்லூரிகளின் ஆண்டு மலர்கள் ஆகியவற்றின் பிரதிகள், ஈழத்தில் வெளியிடப்படும் நூல்களின் பிரதிகள் என்பவற்றை அனுப்பி வைக்குமாறும் கலாசாரப் பேரவை கேட்டுள்ளது. (ஒ - க)

## பன்றித்தலைச்சி அம்மன்பொங்கல்

யாழ்ப்பாணம், மார்ச் 20

சரித்திரப் பிரசித்தி பெற்ற மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயில் பங்குனித் திங்கள் பொங்கல் விழாக்கள் இன்று திங்கட்கிழமையும் 27 ஆம் திகதியும், ஏப்ரல் மாதம் 3-ஆம், 19-ஆம் திகதிகளை கொண்ட நான்கு திங்கட் கிழமைகளிலும் நடைபெறும். (ச-31)

## மணற்காடு முத்துமாரி அம்மன் கொடியேற்றம்

யாழ்ப்பாணம், மார்ச் 20

காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்மன் கோயில் கொடியேற்ற வைபவம் 22 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறும்.

ஏப்ரல் மாதம் 4-ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெறும். [ச]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**பிரம்பி கூந்தல் தைலம்**

இத்தைலத்தை
தினமும் சிரசில் பாவித்துவந்தால்
தலைமுடி நரைத்தல், தலைமயிர் உதிர்தல்
தலைவலி, கண்ணீர் வடிதல், தும்மல்,
மூக்கு அரிப்பு முதலிய ரோகங்களுக்கு
நிவாரணம் தருவதோடு
கூந்தலை நீண்டதாகவும் அடர்த்தியாகவும்,
கருமையாகவும் வளரச் செய்யும்.

**க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
**76, பெரியகடை யாழ்ப்பாணம்.**



# உதயன்

20 - 03 - 1989 திங்கட்கிழமை



**பொன்னுங்காணித் தைலம்**

இத்தைலத்தைத் தினமும் சிரசில் தேய்த்து ஸ்நானம் செய்து வந்தால் மண்டையிடி, தலைவலி, பித்தக் கிறுகிறுப்பு, பீனிசம், அந்திக் கண் மங்கதல், தூக்கமின்மை, கண் எரிச்சல், உஷ்ணக்காந்தல் முதலான வியாதிகளைக் குணமாக்குவதோடு மூளைக்குக் குளிர்ச்சியையும், கண்ணுக்குப் பிராகாசத்தையும் கொடுத்து கூந்தலை அழகாகவும், கறுப்பாகவும் வளரச் செய்யும்.

**க. செ. கைலாசம்பிள்ளை அன் சன்ஸ்**
**76, பெரியகடை, யாழ்ப்பாணம்.**


## வானொலி தொலைபேசியுடன் நவீன புதிய அம்புலன்ஸ்

யாழ்ப்பாணம், மார்ச் 20

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்துக்கு நவீன வானொலித் தொலைபேசி வசதி கொண்ட அம்புலன்ஸ் ஒன்று அடுத்த சில தினங்களில் வந்து சேர வுள்ளது.

ஜெனிவாவில் உள்ள செஞ்சிலுவைச் சங்கத் தலைமையகத்தால் இந்த அம்புலன்ஸ் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

பிராஸ்தாப அம்புலன்ஸ் நவீன வசதிகளையும் குளிரூட்டப்பட்டதாகவும் இருக்கும். இது 60 மையில் சுற்றுடலுக்கு வானொலித் தொலைபேசித் தொடர்பு வசதிகளைக் கொண்டதாக இருக்கும்.

பிரஸ்தாப அம்புலன்ஸ் யாழ். நகரை அண்மித்த பகுதிகளில் இலவசமாக நோயாளிகளை வைத்திய சாலைக்கு எடுத்துச் செல்லப் பயன்படுத்தப்படும். (ஒ-9)

## அடையாள கார்ட், பணம் கண்டெடுப்பு

கனகசிங்கம் சிவகெங்கா என்பவரது அடையாளக் கார்ட் ஒரு குறிப்பிட்ட தொகைப் பணத்துடன் யாழ் பிரவுண் வீதியைச் சேர்ந்த கே. சதானந்தன் என்பவரால் உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. (இ

## பிறந்த நாள் வாழ்த்து

20. 3 1989



### ஞா. பிரசாத்

மண்கும்பான் மேற்கைச் சேர்ந்த ஞானசம்பந்தன்-சந்திராதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வன் பிரசாத் தனது முதலாவது பிறந்த தினத்தை இன்று தமது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, அப்பம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், அத்தைமார், ஜேர்மன் வாசன் சித்தப்பா, சித்தி, அண்ணமார், செல்வி அக்கா, தங்கை சோபனா, மச்சான்மார், மச்சாள்மார், மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சரம்பொன் சண்ணகி அம்மன் அருளால் சகல கலைகளும் பெற்றுப் பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

[10120]


## பீற்றேர்ஸ் - றீவைன்டிங்

9, ஜுபிலி பஜார்,
**யாழ்ப்பாணம்.**

சகலவித 3-பேஸ், (3-Phase) சிங்கிள் (Single phase) மற்றும் தண்ணீர் இறைக்கும் மோட்டர்ஸ் ($\frac{1}{2}$ HP, 1 HP, $1\frac{1}{2}$ HP, 2 HP etc.) மின்சாரத்தில் இயங்கும் சகலவித வீட்டுப் பாவனைப் பொருட்கள். (Fans etc), ருன்ஸ்போர்மஸ் (Transformers. - T. V., Radio, Amplifiers. Deck etc.) அவுட் போட் மோட்டர் கொயில்ஸ், பவர் பாக் (Power pack), தண்ணீர் இறைக்கும் இயந்திர மக்னற்றோ கொயில்கள்,

உடனுக்குடன் பழுது பார்த்தும், றீவைன்டிங் செய்தும் கொடுககப்படும்.

இடம்:

**PETERS- பீற்றேர்ஸ்**

9, ஜுபிலி பஜார்,
[ராணி தியேட்டருக்கு அருகாமையில்]
**பெரியகடை, யாழ்ப்பாணம்.**

(10117)


## ஹெரோயின் தபால் மூலம் விற்பனையாம்!

கொழும்பு, மார்ச் 20

ஹெரோயின் போதைவஸ்து தபால் மூலம் விற்கப்படுவதாக தபால் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர்.

தபால் மூலம் ஹெரோயின் கடத்தப்படுவதைக் கண்டுபிடிப்பதற்காக கொழும்பு மத்திய தபால் பிரிப்பு அலுவலகத்தில் பணியாற்றும் தபால் பிரிப்பவர்களில் 30 பேருக்கு விசேட பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## மீண்டும் தலைவரானார்

யாழ்ப்பாணம், மார்ச் 20

வடபகுதி செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவராக டாக்டர் இ. தெய்வேந்திரன் நேற்று மீண்டும் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். (ஒ-9)

## திரைப்பட கூட்டுத்தாபனத் தலைவர்

கொழும்பு, மார்ச் 20

இலங்கை திரைப்படக் கூட்டுத்தாபனத் தலைவராக திரு. டபிள்யு. ஜே. பெர்னண்டோ நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முன்னாள் அரச அதிபரான இவர் பின்னர் சுயாதீன பத்திரிகா சமாஜத்தின் ஆசிரிய பீட டைரக்டராகப் பணிபுரிந்தார். (ஒ-எ)

## ஜெயலலிதா....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கு அனுப்பியிருக்கிறது.

பொலீஸார் சோதனையிட்ட பிறகு திரு. நடராஜனிடம் கொடுத்த ஆவணங்கள் பட்டியலில் சபாநாயகரின் பெயர் கொண்ட கடிதஉறை சேர்க்கப்பட்டுள்ளது.

இப்படிஜெயலலிதா தனது அறிக்கையில் தெரிவித்தார். (ஒ-எ)

## ஆயுதம்..,..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ரன் பாலசிங்கத்துடன் பேச்சு நடத்துவார்.

எனினும் திரு. பாலசிங்கத்துடன் பேசவுள்ள ஈ. பி. ஆர். எல். எவ். பிரமுகரின் பெயரை பாதுகாப்புக் காரணங்களுக்காக நாம் வெளியிடவில்லை-என்றார்.

இப்படி மாகாண நிதி அமைச்சர் திரு. கிருபாகரன் தெரிவித்தார். (ஒ-எ)

## நிர்ணயிக்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யாது.

ஆனல், ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டவர்களைக் கொண்ட பிரதம நீதியரசரின் தலைமையிலான கண்காணிப்புக் குழு அமைக்கப்பட வேண்டும் என்ற விதி ஒப்பந்தத்தில் உண்டு.

அகதிகள் வாக்களிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். வடக்கு-கிழக்கு நிர்வாக ரீதியான அமைப்புக்களை மாற்றுவதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படவில்லை. (அ-ஒ-எ)

## ரயிலுடன்....

1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சென்றி அடைப்பைத் தாக்கி சேதப்படுத்தியது. ஆனல் அவ்வேளையில் சென்றி அடைப்புக்குள் எவரும் இருக்காததால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது.

எனினும் விதிக்கரையில் நடந்து வந்த — சாவகச்சேரியைச் சேர்ந்த சட்டத்தரணி திரு.பாக்கியலிங்கம் என்பவர் வீசப்பட்ட லொறியின் உதிரிப் பாகங்கள் தாக்கி படுகாயமடைந்தார். லொறியின் சாரதியும் காயமுற்றார்.

## நிரந்தர அதிபர் பதவி: விண்ணப்பிக்க நாளை இறுதி நாள்

மானிப்பாய், மார்ச் 20

மூன்று வருடங்களை முழுமையாகக் கடமையாற்றிய சகல பதில் அதிபர்களும் அதிபர் பதவிகளில் நிரந்தரமாக்குவதற்கான விண்ணப்பங்களை நாளை 21 ஆம் திகதிக்கு முன்னர் அவ்வப்பகுதி கல்வி அதிகாரிகள் மூலம் கல்வித்திணைக்களத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்களத்தில் இதற்கான விண்ணப்பப்படிவங்களை தகுதியுடைய அதிபர்கள் பெற்று வட்டாரக்கல்வி அதிகாரிகள் ஊடாக அனுப்பி வைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப் பட்டது. (ஒ-ச-90)

## யாழ்-கொழும்பு தபால் சேவை 6 நாட்களும் நடைபெறும்

### தபால் அமைச்சர் இணக்கம்

கொக்குவில், மார்ச் 20

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வாரத்தில் 6 நாட்கள் தபால் பொதிகளை எடுத்துவரவும், இங்கிருந்து அனுப்பவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

இப்போது இச்சேவைவாரத்தில் 3 நாட்கள் மட்டுமே நடைபெற்றுவருகிறது.

6 நாட்களும் இச்சேவையை நடத்துவதற்கு இலங்கை போக்குவரத்துச்சபையும் சம்மதித்துள்ளது.

அண்மையில் தபால் அமைச்சருடன் மாகாணதபால் அத்தியட்சகர் திரு. எஸ். எம். சேதுகாவலர் நடத்திய பேச்சுவார்த்தையின்போது இதற்கு இணக்கம்தெரிவிக்கப்பட்டது.

இத்தகவல்களை தபால்அத்தியட்சகர் திரு. எஸ். கனகசுந்தரம் நேற்று கொக்குவில் தபாலக கட்டடத் திறப்புவிழாவில் பேசும்போது தெரிவித்தார். (ஒ-69)

## சபாநாயகர்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேரில் அனுப்பப்பட்டதா என்று செல்வி ஜெயலலிதாவுக்கு நான் இன்று விளக்கம் கேட்டு கடிதம் அனுப்பியிருக்கின்றேன்.

செல்வி ஜெயலலிதாவின் சொந்தக் கையெழுத்தில் சட்டவிதிகளுக்கு ஏற்றவகையில் அவரது இராஜினமாக் கடிதம் நேற்று (சனி) மாலை 5.45 மணிக்கு எனக்கு ஒர் ஆள் மூலம் அனுப்பி வைக்கப் பட்டது.

யார் அக்கடிதத்தைக் கொண்டுவந்தது என்பது எனக்குத் தெரியாது. ஆனல் இராஜினமாக் கடிதம் உண்மையானது.

இனிமேல் தீர்மானிக்க வேண்டிய விவகாரம் ஜெயலலிதா தனது சொந்த விருப்பப்படிதான் அக்கடிதத்தை எழுதினரா என்பதுதான்.

நான் விளக்கம் கேட்கும் முன்னதாகக்கூட செல்வி ஜெயலலிதா இக்கடிதத்தை ஏற்கவேண்டாம்என்று செய்தி அனுப்பியிருந்திருக்கலாம். அப்படி அவர் அனுப்பவே இல்லை.

-இப்படி சபாநாயகர் சொன்னர். [ஒ-எ]

## மரண அறிவித்தல்கள்

### கிருஷ்ணன் கந்தசாமி ஆச்சாரி

ஊர்காவற்றுறை கரம்பொன் கிழக்கைச் சேர்ந்த திரு. கிருஷ்ணன் கந்தசாமி ஆச்சாரி 19-03-1989 இல் காலமாகிவிட்டார். இவர் அழகம்மாவின் அன்புக் கணவரும், Dr. விஜயகுமார் (ஆவுஸ்திரேலியா) நந்தகுமார் (யாழ்ப்பாணம்), Dr. சாந்தகுமார் (லண்டன்), ரவீந்திரகுமார் (இந்தியா), மோகன்குமார் (கனடா), ராஜகுமார் (பிரான்ஸ்), காத்தியாயினி (லண்டன்), உதயகுமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr. சித்திராதேவி (அவுஸ்திரேலியா), ராணி, சுசிலாதேவி (லண்டன்), கிளையரு (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனரும், இந்து, ஆனந்தன், நந்தினி, சாந்தினி, ராதிகா, கார்திபன், ஆரணி, ஆர்த்தி ஆகியோரின் பாட்டனரும் ஆவார். அன்னரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேம்.

தகவல்: **Dr. விஜயகுமார்**

கரம்பொன் கிழக்கு,
காளி கோவிலடி,
ஊர்காவற்றுறை,

]10360)

### தம்பு பாலசந்திரன்

பாலசந்திரன் (இந்திரன்) காலமாகிவிட்டார்.

இவர் நீராவியடி காலம் சென்ற தம்பு மாஸ்ரர்-சுந்தரவல்லியின் அன்பு மகனும், காலம் சென்ற கௌரியின் அன்புக்கணவரும், திருமகள் (இந்து மகளிர் கல்லூரி)யின் அருமைத் தந்தையாரும், காலம் சென்ற திருமதி கைலாசபிள்ளை, காலம் சென்ற திரு. சேனதிராசா, திருமதிகள் தையல்நாயகி (குஞ்சு) கருணனந்தன், காலம் சென்ற ஜெகதீஸ்வரி யோகரத்தினம், புவனேஸ்வரி சத்தியநாதன், யோகேஸ்வரி பரமேஸ்வரன், திரு. தில்லைராசா (பாஸ் U. K.) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னரின் ஈமக்கிரியைகள் 20 - 03 - 1989 திங்கட்கிழமை மாலை 3.00 மணியளவில் 26, சிவகுருநாதர் வீதியில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
**திருமதி கருணனந்தன்.**

[10121]

## மரண அறிவித்தல்கள்

### யோண் சிங்கராயர் நவரெட்ணம்

யோண் சிங்கராயர் நவரெட்ணம் 19-03-89இல் காலமாகிவிட்டார். அன்னர் காலஞ்சென்ற மரிய சலோமையின் அன்புக்கணவரும், திருமதி யூலியான அல்வீணஸ் (ஆசிரியை ம/பாப்பாமோட்டை ந. க. வித்தியாலயம்), திருமதி திரேசா மரியநாயகம் (இளைப்பாறிய ஆசிரியை யா/சென்ஜேக் பாடசாலை), திரு. J. S. கீதபொன்கலன் (கொத்தணி அதிபர், திருகோணமலை மேற்கு), திரு. சி. தார்சீசியஸ் (உப அதிபர், யா/சென் மேரிஸ் வித்தியாலயம் O. L. R.), திருமதி ஹாட்ஸ் கிறிஸ்ரி, திரு. சி. மேரி யோசவ் (குணரெட்ணம்) (எழுதுவினைஞர், கல்வி அலுவலகம், மன்னர்) ஆகியோரின் அன்புத் தந்தையும், திரு. M. F. அல்வினஸ், திரு. P. மரியநாயகம், திருமதி காமலின் கீதபொன்கலன், திருமதி லீலாவதி தார்சீசியஸ், திருமதி ஞானமலர் யோசவ் ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்ற குலசிங்கம், மனுவற்பிள்ளை ஆகியோரினதும், திரு. யேம்ஸ், திரு. சாமினகர், திருமதி செல்லம்மா குரூஸ் ஆகியோரின் அன்புச் சகோதரரும், அருட்திரு லூயிஸ் யோசவ் அடிகள், திரு. L. S. இராசநாயகம், திரு. L. விக்ரர், திரு. L. கிறேசியன், காலஞ்சென்ற திருமதி பூரணம், திருமதி ஆரோக்கியம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், அருட்திரு F. J. ஸ்ரனிஸ்லோஸ் அடிகள், அருட்திரு R. ஜெபசீலன் அடிகள், அருட்திரு பெனர்ட் றெக்னே அடிகள், அருட்திரு M. அமிர்தகுமார் அடிகள், அருட்செல்வி விக்ரோறியா, அருட்செல்வி மேரி சேவியர், அருட்செல்வி கெனற் சேவியர் ஆகியோரின் பெரிய தந்தையுமாவார்.

அன்னரின் பூதவுடல் 20-03-89 இன்று திங்கட்கிழமை மாலை 4.00 மணிக்கு அன்னரது இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரும் ஏற்றுக் கொள்ளும்படி தயவாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

தகவல் தருபவர்
**திரு. சி. தார்சீசியஸ்**
(உப. அதிபர் யா/ சென் மேரிஸ் வித்.)
49, பால உடையார் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம். [10357]

### தங்கம்மா சிவப்பிரகாசம்

முல்லைத்தீவைச் சேர்ந்த திருமதி தங்கம்மா சிவபிரகாசம் காலமானர். இவர் காலஞ்சென்ற திரு. க. சிவப்பிரகாசம் அவர்களின் அன்பு மனைவியும், திலகவதியம்மா, சரஸ்வதி, ஞானம்பிகை (அவுஸ்திரேலியா), சிவராமலிங்கம் (தபால் அத்தியட்சகர் அலுவலகம், யாழ்ப்பாணம்), கணேஸ்வரி (ஆசிரியை முல்லைத்தீவு) ஜெயலட்சுமி (பெண்கள் விவசாயப் பாடசாலை, திருநெல்வேலி), செல்வி சி. மங்கையற்கரசி), தனலட்சுமி, சரவணபவானந்தன் (ஆசிரியர், முல்லைத்தீவு), மங்களேஸ்வரி (டென்மார்க்), இரத்தினனந்தன், (திட்டமிடல் பிரிவு, யாழ். செயலகம்), ஆகியோரின் அன்புத் தாயாரும், சி. செல்லத்துரை, காலஞ்சென்ற க. காசிப்பிள்ளை, பொ. இராசநாயகம், சிவபாக்கியம் (இலங்கா), ந. இராசசிங்கம், ம. சிவசுப்பிரமணியம், ச. திருநாவுக்கரசு, ச. பரமேஸ்வரி, ந. கருணகரன், இ. பிரேமளாதேவி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார். அன்னரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக 15/3, சங்கிலியன்வீதி நல்லூரில் இருந்து செவ்வாய்க்கிழமை (1989-3-21) காலை 8 மணிக்கு செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இத்தகவலை ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேம்.

தகவல்:
**சி. சிவராமலிங்கம்**

(10361)

### பவானந்தன் சரவணனந்தன்

(பவான்)

ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவனும் V. M. ரோட்டைச் சேர்ந்தவருமான பவானந்தன்-சரவணனந்தன் (பவான்) 19-03-1989இல் அகால மரணமானர். அன்னர் பவானந்தன் (முன்னள் ஆசிரியர், எதியோப்பியா), மனோன்மணி ஆகியோரின் புதல்வரும், சண்முகானந்தன், சிவரமணன் ஆகியோரின் சகோதரனும், சின்னையா சிவசம்பு (இளைப்பாறிய ஆசிரியர், சிவசக்தி கோவிலடி, அச்சுவேலி) கமலாச்சி, காலஞ்சென்ற கந்தையா பெரியதம்பி, புவனேஸ்வரி ஆகியோரின் பேரனுமாவார். இறுதிக் கிரியைகள் புலோலி தெற்கு உதய கதிர்காமத்தில் உள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இன்று காலை 10. 00 மணிக்கு ஆனைவிழுந்தான் மயானத்திற்கு தகனக்கிரியைக்குக் கொண்டு செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**
உதய கதிர்காமம், புலோலி. ]10358]

### நீக்கிலாப்பிள்ளை ஜேம்ஸ், B.A

(முன்னள் அதிபர்- புனித சூசையப்பர் கல்லூரி, மாதகல்)

நீக்கிலாப்பிள்ளை ஜேம்ஸ் காலமாகிவிட்டார்.

அன்னரின் பூதவுடல் 21- 3- 89 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2- 30 மணிக்கு அன்னரது இல்லத்திலிருந்து புனித கதிரைமாதா ஆலயத்திற்குத் திருப்பலிக்காக எடுத்துச் செல்லப்பட்டுச் சில்லாலைச் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

தகவல்:
**Dr. Alphonsus Athanasiyar.**
ஜெயாமன்றம், சில்லாலை. (10362)


இப்பத்திரிகைநியூ உதயன் பப்பிளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2. இல் உள்ள அச்சகத்தில் 20 - 03 - 1989 அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org